வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 04 | 28.09.2023 வியாழக்கிழமை | இதழ் : 292 | பக்கங்கள் : 16

# முழுமையான பொருளாதார மீட்சியை இலங்கை இன்னும் உறுதிசெய்யவில்லை!

## ஐ. எம். எவ். பணிக்குழு தெரிவிப்பு

கொழும்பு, செப்ரெம்பர் 28

**இலங்கை பொருளாதாரத்தின் ஸ்திரதன்மைக்கான ஆரம்ப அறிகுறிகள் இருந்தபோதிலும் முழுமையான பொருளாதார மீட்சி இன்னும் உறுதி செய்யப்படவில்லையென சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ. எம். எவ்.) பணிக்குழு தெரிவித்துள்ளது.**

பீற்றர் புருவர், கற்சிய ரினா ஸ்விறிட்செங்கா தலைமையிலான சர்வதேச நாணய நிதிய குழு இலங்கைக்கான பயணத்தை நிறைவு செய்தது. இதன்போது செய்தியாளர் சந்திப்பு ஒன்றையும் நடத்தியது. இதன்போது கருத்து வெளியிட்ட அவர்கள்,

கடினமான ஆனால் மிகவும் அவசியமான சீர் திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை

11

## ஐ. எம். எவ்வின் 2ஆம் கட்ட கடன் எப்போது என்பதில் உறுதியில்லை!

### இலங்கை வந்த குழுவின் தலைவர் பீற்றர் புருவர்

கொழும்பு, செப். 28

சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ. எம். எவ்) இரண்டாம் தவணைக் கடன் இலங்கைக்கு எப்போது வழங்கப்படும் என உறுதியாக தெரிவிக்க முடியாது என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

இலங்கை தனது திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்ற தவறியுள்ளதால் சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் தவணைக் கடன் தாமதமாகலாம் என்றும் ஐ. எம் எவ்.

11



## வல்லிபுர ஆழ்வாருக்கு இன்று தேர்

வடமராட்சி, செப். 28

வரலாற்று பிரசித்தி பெற்ற வடமராட்சி - துன்னாலை - வல்லிபுர ஆழ்வார் ஆலய பெருந்திரு விழாவில் இன்று தேர்த் திருவிழா நடைபெறவுள்ளது.

வசந்த மண்டப பூசைகளை தொடர்ந்து காலை 8.45 மணியளவில்

11

## சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் இலங்கையை நிறுத்த வேண்டும்!

### ஜெனிவாவில் கஜேந்திரகுமார்

ஜெனிவா, செப். 28

தமிழர் தாயகத்தில் திட்டமிட்ட சிங்கள - பௌத்த மயமாக்கல் தொடர்கிறது. தமிழர் தாயகத்தில் இலங்கை அரசின் இனவாத நடவடிக்கைகள் திட்டமிட்ட வகையில் தொடர்கின்றன. எதிர்ப்போர்மீது பயங்கரவாத தடை சட்டத்தின்கீழ் நடவடிக்கைகள் தொடர்கின்றன. அங்கத்துவ நாடுகள் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் (ஐ. சி. சி.) நிறுத்த வேண்டும் - இவ்வாறு ஜெனிவாவில் தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் எம். பியுமான கஜேந்திரகுமார் பொன் னம்பலம்.



ஐ. நா. மனித

11

## சீனா இல்லாமலேயே கடன் மறுசீரமைப்பு!

### இலங்கைக்கு கடன் வழங்கிய சில நாடுகளின் விருப்பமாம்

கொழும்பு, செப். 28

இலங்கையின் கடன்மறுசீரமைப்பு நடவடிக்கைகளை சீனா இல்லாமலே முன்னெடுக்க வேண்டும் என இலங்கைக்கு கடன் வழங்கிய நாடுகளின் குழுவில் உள்ள சில நாடுகள் விரும்புவதாக புளூம்பேர்க் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கு கடன் வழங்கிய முக்கிய நாடுகள் மொராக்கோவில் நடைபெறவுள்ள உலக வங்கி சர்வ தேச நாணய நிதியத்தின் அடுத்த மாத கூட்டத்துக்கு முன்னர் இலங்கையுடன்

11

## குருந்தூர்மலையில் கோயில் கட்ட மூன்று ஏக்கர் வழங்கப்படுமாம்!

கொழும்பு, செப். 28

குருந்தூர்மலையில் ரஜமகா விகாரைக்கு என்று சுவீகரிக்கப்பட்ட 229 ஏக்கர் நிலத்தில் 3 ஏக்கர் காணியை சிவ ஆலயம் அமைக்கவும் - அதன் தேவைகளுக்காகவும் ஒதுக்கவுள்ளதாக புத்தசாசன அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தத் தகவலை சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் சோமரத்ன

11

### இந்திய மீனவர்கள் அத்துமீறல்:

## தமிழ் எம். பிக்களுடன் தமிழகம் சென்று பேச்சு

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

யாழ்ப்பாணம், செப். 28

இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையால் எமது மீனவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்து சக தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் இந்தியாவுக்கு சென்று தமிழக

11



## புலிகளின் ஆயுதம், தங்கம் தேடி நேற்றும் அகழ்வு தொடர்ந்தது!

முல்லைத்தீவு, செப். 28

முள்ளிவாய்க்கால் மேற்கு பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளால் புதைக்கப்பட்டது என்று கூறப்படும் தங்கம் மற்றும் ஆயுதங்களை தேடி நேற்று மூன்றாவது நாளாக அகழ்வுப் பணிகள் நடந்தன.

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் தொல்லியல் திணைக்கள உத்தியோகத்தர்கள், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர், தடயவியல் பொலிஸார், இராணுவத்தினர், அந்தப் பகுதிக்கு பொறுப்பான கிராம உத்தியோகத்தரின் பங்கேற்புடன் இந்த அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

அகழ்வு இடம்பெறும் பகுதியில் விடுதலைப் புலிகள் காலத்தில் தங்கம், ஆயுதங்கள் புதைக்கப்பட்டன என்று பொலிஸாருக்கு இரகசிய

11

## திருகோணமலையில் இரகசியமாக தொடரும் விகாரை கட்டுமானம்!



திருகோணமலை, செப். 28

திருகோணமலை இலுப்பைக் குளத்தில் பொரலுகந்த ரஜ மகா விகாரை எனும் பெயர் பலகை நடப்பட்டுள்ள பகுதியில் இரகசியமாக இரவிரவாக விகாரை கட்டுமானப் பணி தொடர்கிறது என்று அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமையும் அந்தப் பகுதியில் இரகசியமாக விகாரை கட்டுமானம் தொடர்ந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விகாரையின் கட்டுமானப் பணிகளுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் தடையுத்தரவு பிறப்பித்துள்ள நிலையில் அந்தப் பகுதியில் இரகசியமான முறையில் கட்டுமானப் பணிகள்

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

ஈழநாடு



## இப்படியும் நடக்கிறது

என்னுடைய நண்பர் ஒருவர் மிகத் திறமையான சட்டத்தரணி. எண்பதுகளில் அவர் குற்றவியல் வழக்குகளில் பிரபல்யம் பெற்றிருந்தார். சட்டக் கல்லூரியிலிருந்து வெளியே வந்த மிகக் குறுகிய காலத்தில் தனது திறமையால் பிரபல்யமடைந்திருந்தார் அவர்.

அப்போது நாட்டில் ஏற்பட்ட இன மோதல்களைத் தொடந்து சட்டத்தரணிகள் பலரும் பிரிட்டனில் 'சொலிசிட்டர்' பரீட்சைக்காக செல்வதாகக் கூறிக்கொண்டு பிரிட்டனுக்கு புலம்பெயரத் தொடங்கினர். ஒவ்வொருவராக அப்படிச் சென்றுகொண்டிருந்த போது அவரிடம் பயிற்சி பெற்று வந்த இளம் சட்டத்தரணி ஒருவரும் பிரிட்டனுக்கு செல்வதற்கான வீசா பெற்றுவிட்டார். பின்னர், இவரும் தானும் பிரிட்டன் போகலாம் என்று வீசாவுக்கு விண்ணப்பித்திருந்தார்.

ஆனால், இவரது விண்ணப்பம் பிரிட்டன் தூதரகத்தால் நிராகரிக்கப்பட்டுவிட்டது.

இவரிடம் பயிற்சியாளராக இருந்த அந்த இளம் சட்டத்தரணிக்கு வீசா கிடைத்திருந்தது. ஆனால், இவருக்கு ஏன் கிடைக்கவில்லை என்று அவரது அந்த பயிற்சி சட்டத்தரணியைக் கேட்டேன்.

அதற்கு அவர் சொன்னார், 'வேறு என்ன நடந்திருக்கும், வீசாவுக்கு நேர்முகப் பரீட்சைக்கு போயிருந்தபோது இவர் தனது மேதாவித்தனத்தை அங்கும் காட்டியிருப்பார்' என்றார் அவர்.

சில வேளைகளில் மேதாவிகள் தமது திறமையைக் காட்ட எடுக்கும் முயற்சிகள் அவர்களுக்கே பாதகமாக அமைந்துவிடுவதுண்டு. அதுகூட பரவாயில்லை. அது அவர்களை மாத்திரம் பாதிக்கும். ஆனால், மக்கள் பிரதிநிதிகளான நம்மவர்கள் சிலர் தமது மேதாவித்தனத்தை காட்ட வெளிக்கிடுவதால் ஏற்படுகின்ற பாதிப்பு நமது இனத்துக்கும் அல்லவா பாதிப்பை ஏற்படுத்திவிடுகின்றது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தின்போது பேசிய பலரும் குறிப்பாக, எதிர்க்கட்சித் தலைவரில் இருந்து எதிரணி பாராளுமன்ற உறுப்பினர்கள் வரை, பலரும் சர்வதேச விசாரணையை வலியுறுத்தியிருந்தனர்.

அப்போது பேசிய நமது பிரதிநிதிகள், 'நாங்கள் இறுதி யுத்தத்தில் நடந்த கொடுமைகளுக்கு சர்வதேச விசாரணைக்கு கோரிக்கை முன்வைத்தபோது அது அரசியலமைப்புக்கு முரணானது என்று கூறியவர்கள் இப்போது உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு சர்வதேச விசாரணை கோருகிறார்கள்' என்று அவர்களை கேலிசெய்வதுபோல பேசியது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். அப்போது இந்தப் பத்தியில் நாம் ஓர் ஆரூடம் தெரிவித்திருந்தோம். நாம் இவ்வாறு பேசுவதால் இன்று உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்காக சர்வதேச விசாரணை கோருபவர்கள் நாளை அந்தக் கோரிக்கையையே கைவிடலாம். எனவே இது குறித்து நாம் அமைதியாக இருப்பதே சிறந்தது என்று நாம் தெரிவித்திருந்த ஆரூடம் இவ்வளவு விரைவாக நடக்கும் என்று நினைத்திருக்கவில்லை.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு சர்வதேச விசாரணை வேண்டும் என்று உரத்துக் குரல்கொடுத்தவர்களில் முதன்மையானவர் கர்தினால் மல்கம் ரஞ்சித் அவர்கள்தான். அவரது கோரிக்கையை நாமும் வலுவாக முன்வைத்து அவருக்கு ஆதரவு வழங்கியிருந்தால் சிலவேளை அவரும் தனது கோரிக்கையில் திடமாக இருந்திருப்பார்.

ஆனால் நாமோ, முள்ளிவாய்க்காலில் இனப்படுகொலை நடந்த போது அமைதியாக இருந்த கர்தினால் இப்போது சர்வதேச விசாரணை கேட்கிறார் என்று அவரை விமர்சிக்க, அவரோ திடீரென்று 'அந்தர் பல்டி' அடித்து, சர்வதேச விசாரணை தேவையில்லை என்று இப்போது தெரிவித்திருக்கிறார்.

அவரது கோரிக்கையை நமது கோரிக்கையுடன் இணைத்து நாம் பேசியதன் விளைவையே இன்று நாம் அறுவடை செய்திருக்கின்றோம்.

அவரோடு சேர்ந்து உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு சர்வதேச விசாரணை கோரிக்கைக்கு வலு சேர்க்கும் வகையில் நாமும் கோரிக்கையை முன்வைத்திருந்தால் அது சில வேளைகளில் சாத்தியமாகியிருக்கலாம். அப்படி உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு சர்வதேச விசாரணை நடத்தப் பட்டால் அப்போது நமது பிரச்னைக்கும் - அதாவது இறுதி யுத்தத்தில் நடந்த கொடுமை களுக்கும் சர்வதேச விசாரணைக் கோரிக்கையை முன்வைக்கின்ற போது ஒரு சர்வதேச அழுத்தம் சாத்தியமாகியிருக்கும்.

அவ்வாறு கோரிக்கையை முன்வைக்கின்றபோது யாரும் அரசியலமைப்பு சட்டத்தையும் சாட்சிக்கு இழுத்திருக்க முடியாது.

அதைவிடுத்து, நமது கோரிக்கையையும் அதனையும் ஒப்பிட்டு நமது மேதாவித்தனத்தை பறைசாற்ற புறப்பட்டதால் இன்று உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணையும் இல்லாமல் போயிருக்கின்றது.

ஓ... நமக்குத்தான் சர்வதேச விசாரணையே முடிந்துவிட்டதே என்று சிலர் ஏற்கனவே கூறியிருந்தது இப்போதுதான் ஞாபகத்துக்கு வருகின்றது.!

**- ஊர்க்குருவி.**

# நெடுந்தீவில் கைது செய்யப்பட்ட 17 இந்திய மீனவர்கள் விடுதலை!

யாழ்ப்பாணம், செப். 28

நெடுந்தீவில் எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழக மீனவர் கள் 17 பேர் நேற்று புதன்கிழமை விடுதலை செய்யப்பட்டனர்.

இராமேஸ்வரம் - ஜெகதாப்பட்டினத்தை சேர்ந்த 17 மீனவர்கள் கடந்த 13ஆம் திகதி, நெடுந்தீவு கடற்பரப்பில் சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபட்டிருந்தவேளை இலங்கை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர். இதன்போது அவர்களது மூன்று விசைப் படகுகளும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன.

இந்நிலையில், இந்த வழக்கானது ஊர்காவற் துறை நீதிமன்ற நீதிவான் ஜஜநிதி பாலன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போது, மீனவர் கள் 17 பேரையும் 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 18 மாத சாதாரண சிறைத் தண்டனை என்ற அடிப்படையில், நிபந்தனையுடன் விடுவிக்க நீதிவான் உத்தரவிட்டார்.

அத்துடன், உரிமை கோரிக்கை வழக்கின் பின்னர் கைப்பற்றப்பட்ட விசைப் படகுகளை விடுவிக்க மன்றில் தீர்மானிக்கப்பட்டதாக நீரியல் வள திணைக்களத்தின் யாழ்ப் பாண மாவட்ட உதவிப் பணிப்பாளர் ஜெ. சுதாகரன் தெரிவித்தார். (ஐ)

# கொலைக் குற்றம் புரிந்த எண்மருக்கு மரண தண்டனை!

கொழும்பு, செப். 28

கூரிய ஆயுதங்களால் தாக்கி நபர் ஒருவரை கொன்ற குற்றத்துக்காக 8 பேருக்கு களுத்துறை மேல் நீதிமன்ற நீதிபதி பிரதீப் அபேரத்ன நேற்று புதன்கிழமை மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

2003 மார்ச் 24 ஆம் திகதி அல்லது அண்மித்த நாட்களில் களுத்துறை தெற்கில் உள்ள கலீல் பிளேஸில் வசிக்கும் சேயர் மொஹமட் மொஹமட் பாரிஸ் என்பவர் கூரிய ஆயுதங்களால் கொல்லப்பட்டமை தொடர்பில் எட்டு சந்தேக நபர்களுக்கு எதிராக சட்டமா அதிபர் உயர்நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்திருந்தார்.

46 வயதான மொஹமட் ஜைன் முகமது ஹம்சா, 49 வயதான அப்துல் கரீம் மொஹமட் ரவிஸ்தீன், 59 வயதான மொஹமட் மவ்ஸ் மொஹமட், 45 வயதான மொஹமட் ரியாஸ்தீன் மொஹமட், 47 வயதான மொஹமட் ஜிப்ரி மொஹமட் ஜின்னா, அனைவரும் களுத்துறை, மஹா ஹினிடியங்கல பகுதியைச் சேர்ந்த 43 வயதான மொஹமட் ஜிப்ரி மொஹமட் பிர்தவ்ஸ், 44 வயதான மொஹமட் சஹீர் மொஹமட் சியாம், 45 வயதான மொஹமட் நிலாப்தீன் மொஹமட் அஜீல் ஆகியோருக்கே மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# பிரிட்டனின் சனல் -4 தொலைக்காட்சியிடம் ராஜபக்ஷக்கள் நட்டஈடு கோரவேண்டும்!

கொழும்பு, செப். 28

சனல் - 4 வெளியிட்ட ஆவணப்படத்தால் ராஜபக்ஷக்களின் கௌரவத்துக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ஆகவே, சனல் 4 தொலைக் காட்சியிடம் ராஜபக்ஷக்கள் நட்டஈடு கோர வேண்டும் என்பதை வலியுறுத்தவுள்ளோம். மக்களை கொன்று ஆட்சிக்கு வர வேண்டிய தேவை ராஜபக்ஷக்களுக்கு இல்லை என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம். சந்திரசேன தெரிவித்தார்.



கொழும்பில் உள்ள சிறீ லங்கா பொதுஜன பெரமுன பணிமனையில் நேற்று புதன் கிழமை நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் தொடர்பில் சனல் 4 தொலைக்காட்சி சேவை வெளியிட்ட ஆவணப்படத்துக்கு எதிர்க்கட்சியினர் அதிக முக்கியத்துவம் வழங்கினார்கள். குண்டுத்தாக்குதலின் பின்னணியில் ராஜபக்ஷக்கள் உள்ளார்கள்.

பொதுஜன பெரமுனவின் தேர்தல் வெற்றிக்காக குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் பாரதூரமான குற்றச்சாட்டை முன்வைத்தார்கள்.

அரச பாதுகாப்பு பிரதானி சுரேஷ் சாலேவுக்கும் பயங்கரவாதி சஹ்ரானுக்கும் இடையில் எவ்வித சந்திப்பும் இடம்பெறவில்லை என்று சனல் 4 தொலைக்காட்சி சேவையின் முக்கிய தரப்பினர் தற்போது குறிப்பிட்டுள்ளார்கள்.

இதுவே உண்மை.ராஜபக்ஷக்களால்தான் நாட்டு மக்கள் இன்று சுதந்திரமாக வாழ்கிறார்கள். மக்களை கொன்று ஆட்சிக்கு வரும் கொள்கை ராஜபக்ஷக்களுக்கு இல்லை என்பதை அனைவரும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

சனல் 4 தொலைக்காட்சி சேவை வெளிப்படுத்திய ஆவணப்படத்தால் ராஜபக்ஷக்களின் கௌரவத்துக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ஆகவே, இதற்காக ராஜபக்ஷர்கள் சனல் 4 ஊடகத்திடம் நட்ட ஈடுகோர வேண்டும் என் பதை கட்சி என்ற அடிப்படை யில் வலியுறுத்துவோம்.

இலங்கையின் உள்ளக விவகாரங்களில் கனடா உட்பட நாடுகள் தலையிடுவது ஒன்றும் புதிய விடயமல்ல, வழமையானதே. எந்த நாட்டையும் பகைத்துக் கொள்ள வேண்டிய நோக்கம் இலங்கைக்கு இல்லை. நாட்டின் இறையாண்மையை பாதுகாத்துக் கொண்டு சகல நாடுகளுடன் இணக்கமாக செயல்படுவது அத்தியாயசியமானது - என்றார். (ஐ)

# உயர்தரப் பரீட்சை தொடர்பில் திங்களுக்குள் இறுதி தீர்மானம்!

கொழும்பு, செப். 28

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்கான திகதிகள் தொடர்பில் இது வரை இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் எதிர்வரும் திங்கட்கிழமைக்குள் இறுதித் தீர்மானம் அறிவிக்கப்படும் என அமைச்சின் செயலாளர் நிஹால் ரணசிங்க தெரிவித்தார்.

இதேவேளை, உயர்தரப் பரீட்சைக்கு தற்போது திட்டமிடப்பட்டுள்ள திகதிகள் திருத்தப்பட வேண்டும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த முன்னதாக குறிப்பிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

ஈழநாடு
Eelanadu
28.09.2023 வியாழக்கிழமை
சோபகிருது வருடம், புரட்டாதி 11

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இந்த மறதி மிகவும் ஆபத்தானது

புகழ்பெற்ற ஜேர்மனிய அறிஞர் ஹெகல், வரலாறு பற்றி இவ்வாறு கூறுவார் – "நாம் வரலாற்றிலிருந்து எதனை கற்றுக் கொண்டிருக்கின்றோம் என்றால் எதனையும் கற்றுக்கொள்ளவில்லை என்பதைத்தான்." இதேபோன்று, அமெரிக்க சிந்தனையாளர் ஜோர்ஜ் சந்நயணா, வரலாறு பற்றி இவ்வாறு கூறுவார் – "வரலாற்றின் தவறுகளை மறப்போர், அதனை மீளவும் செய்வதற்கு சபிக்கப்படுகின்றார்கள்.", வரலாற்றிலிருந்து எதனையும் கற்றுக்கொள்ள மறுப்பதாலும் – கடந்தகால தவறுகளிலிருந்து எதனையும் கற்றுக்கொள்ள மறுப்பதாலும் இலங்கைத் தீவு மீண்டும் மீண்டும் பிரச்னைகளிலிருந்து வெளியில் வரமுடியாமல் – மீண்டும் மீண்டும் அதற்குள்ளேயே மூழ்கிக் கிடக்கின்றது.

வரலாறு பற்றிய இந்தக் கூற்றுகள் சிங்கள ஆளும் தரப்புகளுக்கும் பொருந்தும். சிங்கள மேலாதிக்கத்துக்கு எதிரான எதிர்ப்பு அரசியலை முன்னெடுத்து இன்றுவரை தோல்வியை மட்டுமே சந்தித்துக் கொண்டிருக்கின்ற தமிழர் தரப்புக்கும் பொருந்தும். சிங்களவர்களும் வரலாற்றிலிருந்து எதனையும் கற்றுக்கொள்ள முயற்சிக்கவில்லை – தமிழர்களும் எதனையும் கற்றுக்கொள்ள முயற்சிக்கவில்லை. இலங்கைத் தீவு இப்போதும் ஒரே மாதிரியான உரையாடலுக்குள் சிக்கிக்கிடப்பதற்கு இதுவே காரணம்.

பிரச்னைகளின் தாற்பரியத்தை புரிந்து கொண்டு அதற்கேற்ப செயல்படுவதற்கு மாறாக எல்லாவற்றிலும் அரசியல் இலாபம் தேடுவதே. இலங்கையின் அதிகார வர்க்கத்தினரை பீடித்திருக்கும் நோயாகத் தொடர்கின்றது. இந்த நோய்க்கு இன்றுவரையில் மருந்திடக்கூடிய புதிய அரசியல் தலைமுறை ஒன்று தோன்றவில்லை.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான சர்ச்சைகள் இந்த அரசியல் நோய்க்கு சிறந்த உதாரணமாகும். ஓர் எல்லை தாண்டிய பயங்கரவாத பிரச்னையை சாதாரண ஒரு விடயமாக்கி – அதன் மூலம் கட்சி அரசியலில் குளிர்காயலாமென்று பலரும் எண்ணுகின்றனர். 2024இல் இன்னொரு தாக்குதல் இடம்பெறலாமென்றும் சில அரசியல்வாதிகள் பேசிவருகின்றனர். முன்னர் இடம்பெற்ற தாக்குதல் ஒன்றின் கனதியை சரிவர புரிந்து கொள்ள மறுத்தால் – அதாவது, முன்னைய வரலாற்றிலிருந்து எதனையும் கற்றுக்கொள்ள மறுத்தால் மீண்டும் முன்னர் இடம்பெற்றவாறான அனர்த்தங்கள் இடம்பெறுவதில் ஆச்சரியம் ஏதும் இருக்கப் போவதில்லை.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான அரசியல் சடுகுடு ஆட்டத்தை நோக்கும்போது, அமெரிக்க உளவுத்துறையைச் சேர்ந்த பெண் அதிகாரியான ஜினா பென்னட் கூறிய விடயமொன்றே நினைவுக்கு வருகின்றது. பென்னட் – ஒஸாமா பின்லேடனால் அமெரிக்காவுக்கு ஏற்படப்போகும் ஆபத்தை முன்கூட்டியே கூறிய ஒருவர். ஒஸாமா நிச்சயம் அமெரிக்காவை நோக்கி வருவான் என்பதை அவரது ஆய்வுகள் கூறின. ஆனால், அதனை மேல் மட்டத்திலிருந்தவர்கள் பெரிதாகப் பொருட்படுத்தவில்லை.

2001இல் அமெரிக்க இரட்டைக் கோபுரங்கள் மீது, ஒஸாமா பின்லேடன் தாக்குதலை மேற்கொண்டான். ஆயிரக்கணக்கான அமெரிக்கர்கள் கொல்லப்பட்டனர். பத்து வருடங்களின் பின்னர் 2011இல் பின்லேடன் பாகிஸ்தானுக்குள் வைத்து அமெரிக்காவால் கொல்லப்பட்டான்.

அப்போது, ஜினா பென்னட்டின் உதவியாளர் ஒருவர் மகிழ்ச்சியுடன் கூறுகின்றார் – இது அல்ஹைடாவுக்கு ஒரு மோசமான நாள். பென்னட் மகிழ்ச்சியடையவில்லை – அவரது பதிலோ வேறு விதமாக இருந்தது – ஆம் இது மிகவும் மோசமான நாள்தான் – ஆனால், அவர்களுக்கு இது மோசமான நாளல்ல – என்று கூறிவிட்டு, தனது இளம் உதவியாளரை பார்த்து கேட்கின்றார் – நீங்கள் எப்போதாவது, Baader-Meinhof – என்னும் பிரபலமற்ற ஜேர்மனிய பயங்கரவாத குழுவை பற்றி கேள்விப்பட்டிருக்கின்றீர்களா? உதவியாளரின் பதில் – இல்லை.

சிறிது காலத்துக்குப் பின்னர், சி. ஐ. ஏயில் பணிபுரியும் ஓர் இளம் ஆய்வாளரிடம் நீங்கள் எப்போதாவது பின்லேடன் என்பவரை பற்றி கேள்விப்பட்டிருக்கின்றீர்களா என்று கேட்கப்படும் – அவரின் பதிலோ இல்லை என்பதாக இருக்கும். அதுதான் எங்களுக்கான மோசமான நாளாக இருக்கும். ஆனால், நான்கு வருடங்களிலேயே சஹ்ரானா – அது யாரென்று இலங்கையின் அரசியல்வாதிகள் கேட்கின்றனர். இந்த மறதி மிகவும் ஆபத்தானது.

# சுன்னாகத்தில் வீடுடைத்து 13 பவுண் நகைகள் திருட்டு!

*யாழ்ப்பாணம், செப். 28*

*பட்டப்பகலில் ஆட்கள் அற்ற வீட்டுக்குள் புகுந்து 13 பவுண் நகைகள் மற்றும் ஒரு தொகை வெளிநாட்டு நாணயம் என்பன திருடப்பட்டன என்று சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் மதியம் இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.*

*வீட்டிலிருந்தவர் பிள்ளைகளை பாடசாலையிலிருந்து வீட்டுக்கு ஏற்றிவருவதற்காக சென்றிருந்தபோதே இந்தத் திருட்டு இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.*

*சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை தொடர்ந்து வருகின்றனர். (ஐ)*

# திருவள்ளுவர் வித்தியின் இயங்குநிலையை உறுதிப்படுத்த சிறீதரன் எம். பி. கோரிக்கை!

*கிளிநொச்சி, செப். 28*

*கிளிநொச்சி திருவள்ளுவர் வித்தியாலயத்தின் இயங்குநிலையை உறுதிப்படுத்துமாறு பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.*

*மலையாளபுரத்தில் சிறீதரன் எம். பி. நடத்திய மக்கள் சந்திப்பின்போதே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார். இதன்போது, திருவள்ளுவர் வித்தியாலயத்தை நிரந்தரமாக மூடுவதற்கான முயற்சிகள் குறித்து மக்கள் அவருக்கு சுட்டிக்காட்டினார். பாடசாலையை நேரில் சென்று பார்த்த அவர், புலம்பெயர்ந்த நன்கொடையாளரின் உதவி மூலம் குடிதண்ணீர் கிணறு ஒன்றை பாடசாலையில் அமைக்க நடவடிக்கை எடுத்திருந்தார்.*

*இதைத் தொடர்ந்து, "வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு, பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரனால் கோரிக்கைக் கடிதமொன்று அனுப்பிவைக்கப்பட்டது. அதில்,*

*1983 இல் நாட்டில் ஏற்பட்ட இனவன்முறைகளால் பாதிக்கப்பட்டு கிளிநொச்சி மாவட்டத்துக்கு இடம்பெயர்ந்த மக்களில் ஒருதொகுதியினரே, திருவள்ளுவர் வித்தியாலயம் அமைந்துள்ள மலையாளபுரம் கிராமத்தில் வாழ்ந்து வருகிறார்கள். கல்வி, பொருளாதாரம், அடிப்படை வசதிகள் என்பவற்றில் விளிம்பு நிலையிலுள்ள இக் கிராம மக்களிடம் அப்பாடசாலையில் நிலவும் அடிப்படைப் பௌதிக வளத் தேவைகளைச் சீர்செய்யக்கூடிய பொருளாதார இயலுமை காணப்படவில்லை.*

*மலையாளபுரம் கிராமத்தையும் அதன் சுற்றயல் பகுதிகளையும் சேர்ந்த நூற்றுக் கணக்கான மாணவர்கள், இந்தப் பாடசாலையை தாண்டி இரண்டரை கிலோ மீற்றருக்கும் அதிக தூரத்திலுள்ள ஏனைய பாடசாலைகளுக்கு செல்கிறார்கள். குடிதண்ணீர் வசதியின்மை, பாடசாலை வளாகத்தை எல்லைப்படுத்துவதற்கோ அல்லது பாடசாலையின் பௌதிக வளங்களை முறையாகப் பேணுவதற்கோ உரியவகையில் சுற்றுவேலி அமைக்கப் படாமை, கடந்த ஐந்து ஆண்டுகளில் ஆங்கிலம் மற்றும் விசேட கல்வி உட்பட முறையான ஆசிரிய ஆளணி நியமிக்கப் படாமை (அண்மையில் ஆறு ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்), ஆளணிப் பற் றாக்குறையால் இரண்டு மூன்று வகுப்பு களை ஒன்றாக இணைத்துக் கற்பிக்க வேண் டிய மோசமான நிலை உட்பட கற்றல், கற்பித்தலுக்குரிய தகுந்த சூழல் கட்டி யெழுப்பப்படா மையே இதற்கான மிகப்பிர தான காரணமாகும்.*

*இந்தக் குறைபாடுகள் தொடர்பில் பாடசாலை அதிபர் மற்றும் நிருவாகத்தினரால் பலதடவைகள் திணைக்கள மட்டங்களின் கவனம் கோரப்பட்டிருந்தும் கூட, பாடசாலையை நிரந்தரமாக மூடுவதிலுள்ள ஆர்வமும் வேகமும், பாடசாலையின் அடிப்படைக் கட்டுமானங்களிலோ, வளப் பங்கீடுகளிலோ, அபிவிருத்தியிலோ காட்டப்படவில்லை என்பதை குற்றஞ்சாட்டும் நோக்கிலன்றி பாடசாலையினதும் அப்பகுதி மாணவர்களினதும் நலனோம்புகை நோக்கில் தங்களுக்கு மனவருத்தத்துடன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.*

*மேற்குறித்த விடயங்களின் அடிப்படையில், மலையாளபுரம் கிராம மக்களின் அடிமட்ட வாழ்வுநிலை, முறையான கல்வி மூலம் அடுத்த தலைமுறையைக் கட்டமைக்க வேண்டிய கட்டாய தேவைப்பாடு என்பவற்றோடு அப்பகுதி மக்களின் விருப்பையும் எதிர்பார்ப்பையும் கருத்தில் கொண்டு, திருவள்ளுவர் வித்தியாலயத்தின் இயங்குநிலையை உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன் - என்றுள்ளது. (ஐ)*

# சிறப்பு சொற்பொழிவு


*யாழ்ப்பாணம், செப். 28*

*நீர்வேலி கந்தசுவாமி கோயிலில் நடத்தப்படும் வாராந்த சுக்கிரவாரச் சிறப்புச் சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங் கமைப்பில் நடைபெறவுள்ளது.*

*பரிபாலன சபைத் தலை வர் த. சோதிலிங்கத்தின் தலைமையுரையை தொடர்ந்து சிறப்பு சொற் பொழிவை இளம் சைவப் புலவர் பொன். சந்திரவேல் "அஞ்சு முகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்" என்னும் விடயப்பொருளில் ஆற்றுவார்.*

*சொற்பொழிவின் இறுதியில் மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ஐ)*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



செப்ரெம்பர் - 28 வியாழக்கிழமை
சோபகிருது வருடம் - புரட்டாதி 11
நல்ல நேரம் : 10.30 - 12.30
ராகு காலம் : 01.30 - 03.30
திதி : சதுர்த்தசி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
ஆன்மிகப் பெரியோரின் ஆசி கிட்டும். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுங்கள். வியாபாரத்தில் கமிஷன் ஸ்டேஷனரி வகைகளால் லாபமடைவீர்கள். மதிக்கப்படுவீர்கள். இனிமையான நாள்.

**இடபம்**
உங்கள் செயலில் வேகம் கூடும். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். தலைமையின் நம்பிக்கையை பெறுவீர்கள். சாதித்துக் காட்டும் நாள்.

**மிதுனம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன் - மனைவிக்குள் இருந்த மோதல்கள் விலகும். வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாகும். புது அதிகாரி உங்களை மதிப்பார். அதிரடி மாற்றம் உண்டாகும் நாள்.

**கடகம்**
சந்திராஷ்டமம் தொடங்குவதால் மன இறுக்கம் வந்து நீங்கும். அதிகாரிகள், உங்களை கூடுதலாக வேலை பார்க்க வைக்க வேண்டி வரும். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும் நாள்.

**சிம்மம்**
உங்களின் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். புது பொறுப்புகளை ஏற்பீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும்.

**கன்னி**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் சில புதுமைகளைச் செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள்.

**துலாம்**
புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். உங்கள் வேலைகளை சக ஊழியர்கள் பகிர்ந்துக் கொள்வார்கள்.

**விருட்சிகம்**
எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். பணத்தை போராடி வசூலிப்பீர்கள். வியாபாரத்தில் பங்குதாரரை சேர்ப்பீர்கள். சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். நினைவுகளில் மூழ்கும் நாள்.

**தனுசு**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். உத்தியோகத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு. உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். வெற்றி பெறும் நாள்.

**மகரம்**
கடந்த 2 நாட்களாக இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். குடும்பத்தில் நிம்மதி உண்டு. வியாபாரத்தில் போட்டிகள் குறையும். சக ஊழியர்கள் உதவுவார்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**கும்பம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் நினைத்த வேகத்தில் சில வேலைகளை முடிக்க முடியாமல் தடை தாமதம் ஏற்படும். அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள். சகிப்புத் தன்மை தேவைப்படும் நாள்.

**மீனம்**
எடுத்த வேலைகளை முடிப்பதற்குள் அலைச்சல் அதிகரிக்கும். வியாபாரத்தில் ஓரளவு லாபம் வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் சங்கடங்கள் வரும். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

# காவிரி விவகாரத்தில் பா. ஜ. க. வன்முறையை தூண்ட முயற்சி

### காங்கிரஸ் கட்சி குற்றச்சாட்டு

சென்னை, செப். 28

“காவிரி விவகாரத்தை கர்நாடக பா. ஜ. க. அரசியலாக்கும் முயற்சியில் இரண்டு மாநில மக்களுக்கிடையே வன்மத்தையும், வன்முறையையும் தூண்டிவிட முயற்சிக்கிறது. கடையடைப்பு போராட்டத்தின்போது, தமிழக முதல்வர் படத்துக்கு அவமரியாதை செய்தவர்கள் மீது கர்நாடக அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்” என தமிழக காங்கிரஸ் குழுவின் தலைவர் கே. எஸ். அழகிரி கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கர்நாடகாவில் பாரதிய ஜனதாவின் ஆதரவு பெற்ற ஒரு குழு காவிரி நீர் பிரச்னையில் தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலினுடைய படத்தை வைத்து அவருக்கு இறுதி சடங்குகள் செய்துள்ளனர்.

இது வன்மையாக கண்டிக்கத்தக்கது. தமிழகத்தைப் பொறுத்தவரை காவிரி ஒழுங்காற்று ஆணையமும், உச்சநீதிமன்றமும் என்ன தீர்ப்பு சொல்லியிருக்கிறார்களோ, அந்த தண்ணீரை நாம் கேட்கிறோம். நீரின்றி பயிர்கள் கருகுகின்றன. தமிழக விவசாயிகள் சொல்லொணா துயரம் அடைகிறார்கள். ஆனாலும் தமிழக மக்களும், தமிழக விவசாயிகளும், தமிழக அரசும், தமிழக முதல்வரும் எல்லை மீறாமல், உணர்ச்சியை தூண்டவிடாமல் பொறுப்பான தன்மைகளோடு நம்முடைய கோரிக்கையை வைத்து வருகிறோம்.

ஆனால், கர்நாடகத்தில் வேறு விதமாக இருக்கிறது. அங்கிருக்கிற பாரதிய ஜனதா இதை அரசியலாக்கும் முயற்சியில் இரண்டு மாநில மக்களுக்கிடையே வன்மத்தையும், வன்முறையையும் தூண்டிவிட முயற்சிக்கிறது. தமிழகத்தில் கூட விவசாயிகள் சங்கம் ரயில் மறியல் செய்தார்கள். அதில் வன்முறை நிகழாமலும், அதே நேரத்தில் எல்லை மீறிய ஒரு சிலரை மற்றும் அதன் தலைவரை பொலிஸ் கைது செய்து தங்களுடைய கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டது.

இதேபோன்ற ஒரு நிலைமை கர்நாடகத்திலும் வர வேண்டும். அனைத்து கட்சிகளும் அரசியல் பொறுப்புணர்வோடு நடந்து கொள்ள வேண்டும். கர்நாடக மாநில அரசு வன்முறையில் ஈடுபடுகிறவர்களை கைது செய்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென தமிழக காங்கிரஸ் சார்பாக கேட்டுக் கொள்கிறேன் - என்றுள்ளது.

(ஐ)

# அ. தி. மு. கவுக்கு எதிராக கருத்து வெளியிடவேண்டாம்!

### பா. ஜ. கவினருக்கு மேலிடம் உத்தரவு

மதுரை, செப். 28

தமிழகத்தில் பா. ஜ. கவுடனான கூட்டணியை முறித்துக் கொண்ட நிலையில், அ. தி. மு. கவினருக்கு எதிராகக் கருத்து தெரிவிக்கக்கூடாது என பா. ஜ. க. நிர்வாகிகளை கட்சி மேலிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

தமிழகத்தில் அ. தி. மு. க. - பா. ஜ. க. கூட்டணி முதன்முறையாக 1998 மக்களவைத் தேர்தலில் உருவானது. அந்தக் கூட்டணி ஓராண்டு மட்டுமே நீடித்தது. மீண்டும் 2004 மக்களவை தேர்தலில் பா. ஜ. கவுடன் அ. தி. மு. க. கூட்டணி அமைத்தது. அந்தத் தேர்தலில் தோல்வியே கிடைத்தது. இதனால், இனிமேல் பா. ஜ. கவுடன் ஒரு போதும் கூட்டணி கிடையாது என அப்போதைய பொதுச் செயலாளர் ஜெயலலிதா அறிவித்தார்.

அதன்பிறகு ஜெயலலிதா மறையும் வரை எந்தத் தேர்தலிலும் பாஜகவுடன் அதிமுக கூட்டணி அமைக்கவில்லை. தமிழகத்தில் 2014இல் நடந்த மக்களவைத் தேர்தலில் பிரசாரங்களில் பிரதமர் மோடியை ஜெயலலிதா கடுமையாக விமர்சனம் செய்தார். அந்தத் தேர்தலில் அ. தி. மு. க. பெரிய வெற்றி பெற்றது.

ஜெயலலிதா மறைவுக்கு பிறகு 2019 மக்களவை தேர்தலில் மீண்டும் அ. தி. மு. க. - பா. ஜ. க. கூட்டணி உருவானது. 2021 சட்டப்பேரவைத் தேர்தலிலும் கூட்டணி தொடர்ந்தது. இவ்விரு தேர்தல்களிலும் தமிழகத்தில் அ. தி. மு. க. - பா. ஜ. க. கூட்டணி தோல்வியைச் சந்தித்தது. தமிழத்தில் 2021 சட்டப்பேரவை தேர்தலுக்குப் பிறகு பா. ஜ. க. மாநிலத் தலைவராக அண்ணாமலை நியமிக்கப்பட்டார். அப்போது அ. தி. மு. கவில் ஓ. பன்னீர்செல்வம் ஓரங்கப்பட்டு எடப்பாடி பழனிசாமி ஒரே தலைமையாக உருவெடுத்தார். அதன்பிறகு அ. தி. மு. க., பா. ஜ. க. இடையே அவ்வப்போது விரிசல் ஏற்பட்டு வந்தது.

இந்தச் சூழலில் பா. ஜ. கவுடனான கூட்டணியை அ. தி. மு. க. அண்மையில் முறித்துக் கொண்டுள்ளது. தமிழகத்தில் மட்டுமல்ல, தேசிய அளவிலும் பா. ஜ. க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து வெளியேறுவதாகவும், மக்களவைத் தேர்தலில் மட்டுமல்ல, அடுத்து நடைபெறும் சட்டப் பேரவைத் தேர்தலிலும் பா. ஜ. கவுடன் கூட்டணி கிடையாது என அ. தி. மு. க. அறிவித்துள்ளது. மக்களவை தேர்தல் நெருங்கும் நிலையில் கூட்டணியில் இருந்து அ. தி. மு. க. வெளியேறியது பா. ஜ. கவுக்கு அதிர்ச்சி கொடுத்துள்ளது.

இந்நிலையில், ‘கூட்டணி விஷயத்தில் அ. தி. மு. கவினருக்கு எதிராக பா. ஜ. கவினர் கருத்து தெரிவிக்கக் கூடாது. பேட்டி கொடுக்கக் கூடாது. எது நடந்தாலும் பேசாமல் அமைதியாக இருந்து கட்சிப் பணி செய்ய வேண்டும்.”, பா. ஜ. க. மேலிடம் கட்சி நிர்வாகிகளுக்கு கட்டளையிட்டுள்ளது.

(ஐ)

# பாராளுமன்றத் தேர்தலில் தனித்தே போட்டியிடுவோம்

### நாம் தமிழர் கட்சி அறிவிப்பு

தஞ்சாவூர், செப். 28

பா. ஜ. க - அ. தி. மு. க. பிரிவை நிரந்தரமாக பார்க்கிறேன். பாராளுமன்ற மக்களவைத் தேர்தலில் தனித்து போட்டியிடுவோம் என்று நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்தார்.

தஞ்சாவூரில் நடந்த கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். மேலும்,

பா. ஜ. க. - அ. தி. மு. க. கூட்டணியில் ஏற்பட்டுள்ளது விரிசல் அல்ல. அது, முறிவாக பார்க்கிறேன். அதை தற்காலிக பிரிவாக பார்க்கவில்லை. நிரந்தரப் பிரிவாகவே பார்க்கிறேன்.

காங்கிரஸ் கட்சி இந்த நாட்டை மிக அதிகமாக 50 ஆண்டுகள் ஆட்சி செய்துள்ளது. அப்போது செய்யாத சாதிவாரி கணக்கெடுப்பை, தற்போது ஆட்சிக்கு வந்தால் செய்யப்போவதாக ராகுல் காந்தி கூறுவது வேடிக்கையாக இருக்கிறது. கர்நாடகத்தில் காங்கிரஸ் ஆட்சி நடைபெறும் நிலையில், அங்கு சாதிவாரி கணக்கெடுப்பை காங்கிரஸ் கட்சி நடத்திக் காட்ட வேண்டும்.

பின்னர் செய்தியாளரின் கேள்விக்குப் பதில் அளித்த சீமான், பாராளுமன்ற தேர்தலில் தனித்துதான் போட்டியிடுவோம் - என்றார்.

(ஐ)

# முதல் மீளாய்வுக்கு முன்னதாகவே தேவையை பூர்த்தி செய்த இலங்கை!

கொழும்பு, செப். 28

**சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி ஏற்பாட்டின் முதல் மீளாய்வுக்கு முன்னதாகவே பெரும்பாலான தேவைகளை இலங்கை பூர்த்தி செய்துள்ளதாக கூறப்படுகிறது.**

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் குழுவினர் முதல் தவணை தொடர்பான மீளாய்வு மற்றும் உடன்படிக்கையை இறுதி செய்வது குறித்த கலந்துரையாடலை நேற்று முன்தினம் நடத்தியிருந்தனர்.**

இந்த கலந்துரையாடலைத் தொடர்ந்து, விரிவாக்கப்பட்ட நிதி வசதித் திட்டத்தின் ஒரு பகுதியாக சுமார் 330 மில்லியன் டொலர்களை வழங்குவதற்கு உதவும் வகையில் ஊழியர் மட்ட ஒப்பந்தம் இறுதி செய்யப்படும்.

இம்மாதம் 14ஆம் திகதி இலங்கை வந்த சர்வதேச நாணய நிதியத்தின் குழு, மார்ச் மாதம் அங்கீகரிக்கப்பட்ட வேலைத் திட்டம் தொடர்பில் பலதரப்பினருடனும் கலந்துரையாடல்களை மேற்கொண்டது.

அதன்படி நேற்று முன் தினம் கொழும்பில் இடம்பெற்ற இறுதிக்கட்ட பேச்சுவார்த்தை நடைபெற்றபோது அரச வருவாயை அதிகரிக்க இயலாமை குறித்து சர்வதேச நாணய நிதியத்தின் குழுவினர் கவலை வெளியிட்டனர்.

சர்வதேச நாணய நிதியத்தின் திட்டம் தொடர்பான விவாதங்கள் தொடங்கியதில் இருந்து அரச வருவாயை அதிகரிப்பது ஒரு சர்ச்சைக்குரிய விடயமாக காணப்படுகின்றது.

பேச்சுவார்த்தையின் தொடக்கத்தில், முந்தைய உடன்படிக்கையில் சில இலக்குகளை இலங்கை அடையத் தவறியதால், இம்முறை கடுமையான நிபந்தனைகளை விதிக்கவேண்டும் என சர்வதேச நாணய நிதியத்தின் குழுவினர் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இந்த ஆண்டு மார்ச் மாதம், 48 மாத நீடிக்கப்பட்ட இலங்கையின் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் சீர்திருத்தங்களுக்கு ஆதரவாக சுமார் 3 பில்லியன் டொலர்களை வழங்க சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாக சபை அங்கீகாரம் வழங்கியிருந்தது.

நிர்வாக சபையின் முடிவை அடுத்து மார்ச் மாதத்தில் முதற் கட்டமாக சுமார் 333 மில்லியன் டொலர்கள் வழங்கப்பட்ட நிலையில் ஜூன் இறுதி வரை திட்டத்தின் செயல்திறனைப் பரிசீலித்த பின்னர் அடுத்தகட்ட கடன்தொகை வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# மணியந்தோட்டத்தில் கண்காட்சி

யாழ்ப்பாணம், செப். 28

கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தின் வழிநடத்தலில் மணியந்தோட்டம் ஒன்றினணந்த சமூக மேம்பாட்டுக்கான அமைப்பின் கீழ் இயங்கும் 'இணைந்த கரங்கள்' நடத்தும் ' எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்' என்னும் மாபெரும் கண்காட்சி எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிமுதல் மாலை 5.30 மணிவரை மணியந்தோட்டம் இரண்டாம் குறுக்குத் தெருவில் நடைபெறவுள்ளது.

இந்தக் கண்காட்சியில் யாழ்ப்பாணத்தை ஆண்ட தமிழ் மன்னர்கள்,இலங்கையின் சர்வமத இனமக்களும் அவர்களின் உணவுப் பழக்கங்களும், எதிர்கால சமூகம் மறந்துபோகும் பழைய காலத்துப் பாவனைப் பொருட்கள் உட்பட பல்வேறு வகையான சிறப்பம்சங்கள் இடம்பெறுகின்றன. இவற்றுடன் மணியந்தோட்ட மண்ணில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் விற்பனைக்கூடம், மகிழ்வூட்டும் விளையாட்டுக்கள் என்பவரும் இடம்பெறவுள்ளன.

சிறுவர்களையும், இளைஞர்களையும், பெண்களையும் முதன்மைப்படுத்தி அவர்களின் திறன்களை வெளிக்கொண்டு வகையில் இக்கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மழைவீழ்ச்சி அதிகரிக்கும்!

கொழும்பு, செப். 28

எதிர்வரும் நாட்களில் நாட்டின் தென்மேற்கு பகுதிகளில் மழைவீழ்ச்சி அதிகரிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதன்படி, மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களின் சில பிரதேசங்களிலும் 100 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும் என அந்த திணைக்களம் அறிவித்துள்ளது.

அத்துடன், வடமேல், ஊவா, கிழக்கு மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் பலத்த மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. (அ)

# இலங்கைக்கு வருகை தந்த உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கையை 10 இலட்சமாக்கிய ரஷ்ய குடும்பம்



கொழும்பு, செப். 28

இந்த வருடம் ஜனவரி மாதம் முதல் நேற்று முன் தினம் வரை இலங்கைக்கு வந்த வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை பத்து இலட்சம் அடையச் செய்யும் வகையில் ஒரு ரஷ்ய பிரஜை மற்றும் அவரது குடும்பத்தினர் அனைவரும் நேற்று முன் தினம் செவ்வாய்க் கிழமை பிற்பகல் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

அவர்களை வரவேற்கும் முகமாக இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் கட்டுநாயக்க விமான நிலைய வருகை முனையத்தில் வைபவமொன்றை ஏற்பாடு செய்திருந்தது.

இலங்கைக்கு வந்த ரஷ்ய நாட்டவருடன் அவரது மனைவி மற்றும் இரண்டு குழந்தைகளும் இருந்தனர்.

ரஷ்யாவில் இருந்து ஓமன் நாட்டுக்கு வந்த அவர்கள் பின்னர் மஸ்கட்டிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர். (அ)

# ஆசிய அபிவிருத்தி வங்கியுடனான கடன் ஒப்பந்தத்துக்கு அமைச்சரவை அனுமதி

கொழும்பு, செப். 28

ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் உடன்படிக்கை ஒன்றை மேற்கொள்ளும் முன்மொழிவுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் சீர்திருத்தத் திட்டத்தின் கீழ் 400 மில்லியன் டொலர் கடன் வசதியின் முதல் தவணையைப் பெறும் வகையில் இந்த உடன்படிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

200 மில்லியன் டொலர் மதிப்புள்ள இரண்டு கடன் வசதிகளைப் பெறுவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் ஆரம்பகட்ட விவாதங்கள் நடத்தப்பட்டன.

ஒவ்வொரு கடன் தொகுதியும் இரண்டு துணைத் திட்டங்களைச் செயற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது என அறிவிக்கப்பட்டுள்ளது.

மோதல் மேலாண்மை கட்டமைப்புகள் மற்றும் நிதித்துறை உறுதிப்படுத்தலை மேம்படுத்துவதையும் இரண்டாவது திட்டம் எதிர்ப்பு நிதி அமைப்பை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டது.

அதன்படி குறித்த கடன் தொகையை 25 வருடத்தில் திருப்பிச் செலுத்தும் வகையில் 2 விகித வட்டியோடு உடன்படிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. (அ)

## காணி கையளிப்பு விவகாரம்:

# போராட்டத்தில் குதித்தனர் பொன்னகர் கிராம மக்கள்

கிளிநொச்சி, செப். 28

கிளிநொச்சி, கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பொன்னகர் கிராம மக்கள் நேற்று போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

குறித்த பகுதியில் பொதுச் சந்தை, விளையாட்டு மைதானம் மற்றும் தபாலகம் உள்ளிட்ட பொது தேவைகளுக்காக அடையாளப்படுத்தப்பட்ட காணியொன்று, தொண்டு நிறுவனமொன்றுக்கு கையளிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது சந்தை, ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளிட்ட சேவை நிலையங்களுக்கு முன்னுரிமைப்படுத்தி காணியை வழங்குமாறு அப்பகுதி மக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

மேலும், தமது பிரதேசத்தில் 24 குடும்பங்களுக்கு காணி



வழங்க விண்ணப்பித்துள்ள நிலையில், அதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும், இவ்வாறு காணிகளை தொண்டு நிறுவனங்கள் ஊடாக வெளிநாட்டவர்களிற்கு வழங்கும் நடவடிக்கையை கைவிடவேண்டும் எனவும் மக்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில் குறித்த விடயம் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என கரைச்சி பிரதேச செயலாளர் பி.ஜெயகரன் தெரிவித்தார். (அ)

# நிஷாந்தவுக்கு பிணை

கொழும்பு, செப். 28

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நிஷாந்த முத்துஹெட்டிகமவுக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

காலி நீதவான் நீதிமன்றத்தில் நேற்று வழக்கு விசாரணை இடம்பெற்றபோது அவரை 50 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீர மற்றும் 50,000 ரூபாய் ரொக்கப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இதனை தொடர்ந்து மேலதிக விசாரணையை எதிர்வரும் பெப்ரவரி 02 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பதாக காலி நீதவான் அறிவித்தார்.

சொகுசு காரை சட்டவிரோதமாக மாற்றியமைத்தமை தொடர்பில் நிஷாந்த முத்துஹெட்டிகமவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உரிய காலத்தில் தேர்தல் நடக்கும்!

## வஜிர அபேவர்தன உறுதி

**கொழும்பு, செப். 28**

**ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல் ஆகியவற்றை உரிய காலத்தில் அரசாங்கம் நடத்துமென ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.**

இத்தேர்தல்களுக்காக நிதி ஒதுக்கப்பட்டாலும், ஒதுக்கப்படாவிடினும் மீண்டும் எதிர்காலத்தில் இதற்கான நிதியைப் பெற்று, இந்த தேர்தல்களை ஜனாதிபதிக்கு நடத்த முடியும் என அரசியலமைப்பில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

அத்துடன் ஏனைய தேர்தல்கள் அரசியலமைப்பின் ஒரு பகுதியாக காணப்படவில்லை. அவை, வேறு சட்டங்களின் கீழ் உள்ள கட்டளைகளாகும் என்று அவர் குறிப்பிட்டார்.

தென் மாகாணத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற நிகழ்வுகளில் கலந்துகொண்ட பின்னர், ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்வரும் வரவு-செலவுத் திட்டத்தில் நாட்டு மக்களுக்கு எவ்வாறான நிவாரணங்கள் வழங்கப்படவுள்ளது என ஊடகவியலாளர்கள் இதன்போது கேள்வி எழுப்பினார். இதற்குப் பதிலளித்த வஜிர அபேவர்தன



எம்.பி,

வரவு-செலவுத் திட்டமானது ஒரு கற்பனை கதை அல்ல. இவ்வாறான கதை அல்லாத வரவு செலவு திட்டத்தையே தயாரிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (அ)



# பேர்ளின் பயணமானார் ரணில்

கொழும்பு, செப். 28

ஜேர்மனியில் நடைபெறும் பேர்ளின் குளோபல் அமர்வில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 4 நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்று ஜேர்மனிக்கு பயணமானார்.

கட்டார் எயார்வேஸ் விமானமான கியூ.ஆர். 659 இல் ஜனாதிபதி உட்பட 12 பேர் கொண்ட தூதுக்குழு கட்டாரின் டோஹாவுக்கு சென்றதாக கூறப்படுகிறது.

கியூபாவில் நடைபெற்ற ஜி-77 மற்றும் சீன உச்சி மாநாடு, அமெரிக்காவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையின் 78 ஆவது அமர்வில் கலந்துகொண்டதை அடுத்து கடந்த 24 ஆம் திகதி இலங்கை வந்தடைந்த ஜனாதிபதி நேற்று அதிகாலை ஜேர்மனிக்கு பயணமானார். (அ)

# சந்திரிகா-மைத்திரி ஒரே மேடையில்!

கொழும்பு, செப். 28

சுதந்திரக்கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக கடும் விமர்சனங்களை முன்வைத்துவந்த அக்கட்சியின் முன்னாள் தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, மைத்திரி பங்கேற்றிருந்த நிகழ்வொன்றில் கலந்துகொண்டுள்ளார்.

சுதந்திரக் கட்சியின் நிறுவனரும், முன்னாள் பிரதமருமான எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவின் 64 ஆவது நினைவு தினம் நேற்று முன் தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இதனையொட்டி ஹொரகொல்ல பகுதியில் அமைந்துள்ள பண்டாரநாயக்கவின் சமாதியில் நினைவு கூரல் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கடந்த காலங்களில் பண்டாரநாயக்கவின் ஜனன தினம், சிரார்த்த தினம் என்பன சந்திரிகா தலைமையிலும், மைத்திரி தலைமையிலும் இரு அணிகளாக நிகழ்வுகள் நடத்தப்பட்டு வந்தன.

இந்நிலையில் இம்முறை சுதந்திரக்கட்சி ஒரு அணியாக நிகழ்வை நடத்தியுள்ளது. முன்னாள் அமைச்சர் குமார வெல்கமவும் நிகழ்வில் பங்கேற்றிருந்தார்.

பிரதமர் தினேஷ் குணவர்தன, முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய, ஜி.எல்.பீரிஸ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

சுதந்திரக் கட்சியில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர நிகழ்வில் பங்கேற்கவில்லை.

(அ)

# தேவைக்கு அதிகமாக அரிசி கையிருப்பில்!

## விவசாய அமைச்சு தெரிவிப்பு

කෘෂිකර්ම දෙපාර්තමේන්තුව
விவசாயத் திணைக்களம்
Department of Agriculture

கொழும்பு, செப். 28

நாட்டில் 7 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி, தேவைக்கு மேலதிகமாக இருப்பதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த பெரும்போகம் மற்றும் சிறுபோகத்தில் மொத்த நெல் அறுவடை சுமார் 52 இலட்சம் மெற்றிக் தொன்னாக பதிவாகியுள்ளது.

அதனூடாக, 31 இலட்சம் மெற்றிக் தொன் அளவு அரிசியை உற்பத்தி செய்யமுடியும்.

நாட்டின் வருடாந்த அரிசித் தேவை சுமார் 24 இலட்சம் மெட்ரி டன்களாகும். எனவே, 7 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி தேவைக்கு மேலதிகமாக உள்ளதாக விவசாய அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதன்படி, அடுத்த பெரும்போக அறுவடை வரை அரிசியை இறக்குமதி செய்யவேண்டிய அவசியமில்லை என விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# சீனாவின் சினோபெக் நிறுவனத்துக்கு மேலும் 50 எரிபொருள் நிலையங்கள்!

கொழும்பு, செப். 28

சீனாவின் சினோபெக் நிறுவனத்திற்கு இலங்கையில் மேலும் 50 எரிபொருள் நிலையங்களை அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

கொழும்பு இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரித்தபோதே அவர் இதனை கூறினார்.

இலங்கை கனியவள கூட்டுத்தாபனத்தினால் சினோபெக் நிறுவனத்துக்காக 150 எரிபொருள் நிலையங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், அவற்றில் 145 எரிபொருள் நிலையங்களை பொறுப்பேற்பதற்கு அந்த நிறுவனம் கையெழுத்திட்டுள்ளது.



தற்போது, மேலும் 50 நிலையங்களை அமைப்பதற்காக சினோபெக் நிறுவனத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், மொத்த எரிபொருள் நிலையங்களின் எண்ணிக்கை 200 எரிபொருள் நிலையங்களுக்கு மட்டுப்படுத்தப்படவேண்டிய அவசியமில்லை.

எனினும், ஏதேனும் கோரிக்கைகள் இருந்தால், வழங்குநர்கள் மற்றும் விநியோகஸ்தர்களுடனான ஒப்பந்தங்களைப் பரிசீலிக்க தயாராக உள்ளதாக அமைச்சர் காஞ்சன விஜேசேகர கூறினார். (அ)

# நாகர்கோவிலில் பொலிஸ் காவலரண் அமைக்க நடவடிக்கை ஏதும் இல்லை!

## இதனால் சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்கிறது

யாழ்ப்பாணம், செப். 28

வடமராட்சி, மருதங்கேணியில் இடம்பெற்றுவரும் சட்டவிரோத மணல் அகழ்வைக் கட்டுப்படுத்துவதற்கு பொலிஸ் காவலரணொன்றை அமைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டபோதிலும் இன்று வரை அதற்காக எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

நேற்று இடம்பெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில்கலந்துகொண்டு உரையாற்றும்போதே மருதங்கேணி பிரதேச செயலர் இதனை கூறினார்.

இதன்போது அந்தப் பகுதியில் இரவு பகலாக தொடர்ச்சியாக மணல் அகழ்வுகள் இடம்பெற்று வருவதாகவும், கூட்டங்களில் மாத்திரமே இந்த விடயம் குறித்து பேசப்படுவதாகவும், ஆனால் எந்த விதமான ஆக்கபூர்வமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் அவர் விசனம் தெரிவித்தார். (அ)

# அதிபர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புமாறு உயர்நீதிமன்று பணிப்பு

கொழும்பு, செப். 28

இலங்கை அதிபர் சேவையின் தரம் 111 இற்கான 4,718 வெற்றிடங்களை நிரப்புவதற்கு கல்வி அமைச்சினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த ஆட்சேர்ப்பிற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனு மீதான இடைக்கால தடை உத்தரவு வாபஸ் பெறப்பட்டதையடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

விடயத்துடன் தொடர்புடைய மேலும் சில மனுக்களை வாபஸ் பெறுவதற்கு மனுதாரர்களினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் ஆட்சேர்ப்பு தொடர்பான சுற்றுநிருபத்தை இடைநிறுத்துமாறு உயர் நீதிமன்றத்தினால் இதற்கு முன்னர் பிறப்பிக்கப்பட்டிருந்த இடைக்கால தடை உத்தரவும் நேற்று நீக்கப்பட்டது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த மனு நேற்று பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

(அ)

# தாதியை கத்தரிக்கோலால் குத்திய சத்திரசிகிச்சை நிபுணர் குற்றவாளி

## குருநாகல் நீதவான் நீதிமன்றம் அறிவிப்பு

கொழும்பு, செப். 28

**குருநாகல் போதனா வைத்தியசாலையின் சத்திரசிகிச்சை அரங்கில் தாதியை கத்தரிக் கோலால் தாக்கி காயப்படுத்திய சம்பவம் தொடர்பில் நீதிமன்றத்தில் குற்றஞ்சாட்டப்பட்டி ருந்த குருநாகல் சத்திர சிகிச்சை நிபுணர் குற்றவாளி என குருநாகல் நீதவான் பந்துல குணரத்ன தெரிவித்தார்.**

குற்றம் சாட்டப்பட்ட சத்திர சிகிச்சை நிபுணரை குற்றவாளி என தீர்ப்பளித்த பிரதம நீத வான் பந்துல குணரத்ன, சத்திர சிகிச்சை நிபுணர்கள் கோபத்து டனும் ஆத்திரத்துடனும் பணி புரியக்கூடாது, ஒழுக்கத்துட னும் நிதானத்துடனும் தமது கடமைகளை செய்யவேண்டும் என பிரதான நீதவான் குணரத்ன தெரிவித்தார்.

தேவைப்பட்டால், பிரதி வாதி அறுவைச் சிகிச்சை நிபுண ரிடம் இருந்து இழப்பீடு கோரி மாவட்ட நீதிமன்றத்தில் வழக் குத் தாக்கல் செய்ய முடியும் என்று தீர்ப்பை வழங்கிய பின் னர், தாதியிடம் நீதவான் அறி வித்தார்.

2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12 ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்த நாட்களில் குருநாகல் போதனா வைத்திய சாலையின் அறுவைச் சிகிச்சை அறையில் பணிபுரியும் தாதி ஒருவரை தாக்கி காயப்படுத்திய குற்றத்திற்காக குற்றஞ்சாட்டப் பட்ட சத்திர சிகிச்சை நிபுண ருக்கு எதிராக குற்றவியல் சட் டத்தின் 314 ஆவது பிரிவைப் பயன்படுத்தி குருநாகல் தலை மையகப் பொலிஸார் தலைமை நீதவான் நீதிமன்றத்தில் வழக் குத் தாக்கல் செய்தனர்.

இந்த சத்திர சிகிச்சை நிபு ணர் இந்தக் குற்றத்தைச் செய்த போது, குருநாகல் போதனா வைத்தியசாலையின் தொடர்பு டைய சத்திர சிகிச்சை நிலையத் தில் பணியாற்றிய இரண்டு வைத்தியர்கள் மற்றும் தாதியர் கள் இந்த வழக்கில் சாட்சிகளாக குறிப்பிடப்பட்டிருந்தனர்.

அந்த சாட்சிகள் அனைவ ரும் பிரதிவாதி சத்திர சிகிச்சை நிபுணருக்கு ஆதரவாக சாட்சி யங்களை வழங்கியிருந்த பின்ன ணியில், சத்திரசிகிச்சை நிபுண ருக்கு எதிராக நீதிமன்றம் குற்றஞ் சாட்டியமை விசேடமானது.

சத்திர சிகிச்சை நிபுணரால் தாக்கப்பட்ட தாதி தொடர்பில் நீதிமன்ற நீதிவான் வழங்கிய சட்ட வைத்திய அறிக்கை மற் றும் முறைப்பாடு செய்த தாதி வழங்கிய சாட்சியங்கள் மற்றும் உரிமைகளுக்காக வாதிட்ட சிரேஷ்ட சட்டத்தரணி கீர்த்தி துனுசிங்கவின் வாதங்களை கருத்திற்கொண்டு பிரதிவாதி சத்திரசிகிச்சை நிபுணரை குற்ற வாளியென அறிவித்து இந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

# கொள்ளுப்பிட்டியில் ரயில் தடம் புரண்டதால் பாதிப்பு

கொழும்பு, செப். 28

ரயில் ஒன்று தடம் புரண்ட தால், கடலோரப் பாதைக்கான ரயில் போக்குவரத்து பாதிக்கப் பட்டது.

மஹவயில் இருந்து மொரட் டுவை நோக்கி பயணித்த ரயில், கொள்ளுப்பிட்டி பகுதியில் தடம் புரண்டதாக ரயில் திணைக் களம் தெரிவித்துள்ளது.

நேற்றுக் காலை 8 மணி அள வில் ரயில் தடம் புரண்டதால், கரையோரப் பாதையில் ஒரு பாதையில் மாத்திரமே ரயில் சேவை இடம்பெற்றதாக தெரி விக்கப்பட்டது.

ரயில் தடம் புரண்டதன் காரணமாக ரயில் பாதையும் சேதமடைந்ததாகவும், ரயில் பாதையை சரி செய்யும் பணி கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வும் ரயில் திணைக்களம் தெரி வித்தது. (அ)

# கற்பிட்டி வெடிப்பு சம்பவத்தில் விமானப் படை அலுவலர் பலி!

கொழும்பு, செப். 28

கற்பிட்டி விமானப் படை பயிற்சி முகாமில் ஏற்பட்ட வெடிப்பு சம்பவத்தில் விமானப் படை உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்தார்.

அத்துடன் மற்றுமொருவர் காயமடைந்துள்ளதாக காவல் துறை ஊடகப்பிரிவு தெரிவித் துள்ளது.

பயிற்சி நடவடிக்கையின் போது நேற்று முன் தினம் பிற் பகல் இந்த அனர்த்தம் நேர்ந்துள் ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பொல்கஹாவெல பகுதி யைச் சேர்ந்த 28 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந் தார்.

அவர்கள் பயிற்சிக்காக பயன் படுத்திய வெடி பொருளே வெடிப்பு சம்பவத்துக்கு காரண மாக இருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளதுடன் பாதுகாப்பு தரப்பினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத் துள்ளனர். (அ)

# அரசியல்வாதிகள் உள்ளே நுழையாதீர்!



கொழும்பு, செப். 28

நாட்டில் அரசியல் வாதிக ளின் ஊழல் மற்றும் முறைகே டுகள் குறித்து கோபம் அதிகரித் துள்ள நிலையில், அனைத்து அரசியல்வாதிகளும் நேர்மை யற்றவர்கள், அவர்கள் இந்த வீட்டுக்குள் நுழைய முடியாது என தனமல்விலவில் உள்ள ஒரு வீட்டின் வெளியே கையால் எழுதப்பட்ட பலகை வைக்கப் பட்டிருந்தது.

தனமல்வில, கியுல் ஆரா பிரதேச செயலகப் பிரிவிற்குட் பட்ட பகுதியில் இந்த சம்பவம் நடந்துள்ளது.

மொனராகலை மாவட் டத்தை (அரசு மற்றும் எதிர்க்கட்சி) பிரதிநிதித்துவப்படுத்தும் சுமார் எட்டு பாராளுமன்ற உறுப்பி னர்கள் உள்ளனர். இந்த அரசியல் வாதிகள் கொழும்பில் இருந்து வரும் வர்த்தகர்களுக்கு தமது காணிகளை விற்றதைத் தவிர தமது கிராமங்களில் எந்தவொரு அபிவிருத்தி நடவடிக்கைகளி லும் ஈடுபடவில்லை என மக்கள் குற்றம் சுமத்துகின்றனர். (அ)

# சுரேஷ் சாலே-சஹ்றான் சந்திப்பு; ஆதாரம் எதுவும் எம்மிடமில்லை

## கூறுகின்றது சனல் 4

கொழும்பு, செப். 28

இலங்கையின் அரச புலனாய் வுப் பிரிவின் தலைவரான மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலேயுக்கும் ஏப்ரல் 21 தாக்குதலின் சூத்திர தாரியாக கருதப்படும் சஹ்றான் ஹாஷிமுக்கும் இடையில் சந் திப்பு இடம்பெற்றது என்பதற் கான ஆதாரம் எதுவும் தங்களி டம் இல்லை என பிரித்தானியா வின் சனல் 4 தொலைக்காட்சி யில் ஒளிபரப்பாகிய ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பான ஆவணப் படத்தின் இயக்குநரும், தயா ரிப்பாளரும் தெரிவித்துள்ளனர்.

ஜெனிவாவில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட போது அவர்கள் இதனைக் குறிப்பிட்டுள்ளனர்.

பேஸ்மென்ட் பிலிம்ஸ் நிறுவனத்தின் தயாரிப்பாளர் பெண் டி பியர் மற்றும் இயக்கு நர் தொம் வோக்கர் ஆகியோர், ஏப்ரல் 21 தாக்குதல் பற்றிய ஆவ ணப்படத்தை உருவாக்கியுள்ள னர்.

கோட்டாபயவை ஜனாதிப தியாக்குவதற்காக புலனாய்வு பிரிவின் தலைவர் சுரேஷ் சாலே வுக்கும் ஏப்ரல் 21 தாக்குதலின் சூத்திரதாரிகளுக்கும் இடையே தாம் சந்திப்பை ஏற்பாடு செய்த தாக குறித்த ஆவணப்படத்தின் தகவலாளர் தெரிவித்திருந்தார்.

பிள்ளையான் எனப்படும் சிவநேசத்துரை சந்திரகாந்தனின் ஊடகப் பேச்சாளராகப் பணி யாற்றி, தற்போது சுவிற்சர்லாந் தில் அரசியல் தஞ்சம் கோரியுள் ளவரென கூறப்படும் ஆசாத் மௌலானா என்ற தகவலாளர் இந்த குற்றச்சாட்டுக்களை முன் வைத்திருந்தார்.

இந்தநிலையில் ஊடகவிய லாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த தொம் வோக்கர், சஹ்றான் ஹாஷிமுடன் தகவலா ளரான ஆசாத் மௌலானாக்கு நேரடித் தொடர்பு இருந்ததா? என்பது தமக்கு தெரியாது என வும் சந்திப்பை ஒருங்கிணைப்ப தில் அவர் எதற்காக இணைந் தார் என்பதற்கு தம்மால் தெளி வான பதிலை அளிக்க முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

வெளிப்படையாகச் சொல் வதனால், சஹ்றானுக்கும் சுரேஸ் சாலேயுக்கும் இடையில் இதுபோன்ற முன் சந்திப்பு நடந்ததற்கான எந்த ஆதாரமும் தம்மிடம் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# தங்க நகைகள், தங்கப் பாளங்கள் கடத்த முற்பட்ட ஐந்து பேர் கைது!

கொழும்பு, செப். 28

12 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியான தங்க நகைகள் மற்றும் பாளங்களை கடத்த முற்பட்ட ஐந்து பேர் கட்டுநா யக்க சர்வதேச விமான நிலை யத்தில் வைத்து இலங்கை சுங்க அதிகாரிகளால் நேற்று காலை கைது செய்யப்பட்டனர்.

நான்கு பெண்களும் ஆண் ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் என தெரி விக்கப்பட்டது.

சந்தேகநபர்கள் டுபாயிலிருந்து இரண்டு தனித்தனி விமானங்க ளில் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

மூன்று பெண்களும் ஆண் ஒருவரும் நேற்று அதிகாலை 01.10 அளவில் வந்துள்ளதாக வும், மற்றைய பெண் டுபாயிலி ருந்து 5.25 மணிக்கு வந்த யூ. எல்-226 என்ற சிறிலங்கன் எயார்லைன்ஸ் விமானத்தில் வந்துள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கைதானவர்கள் கொழும்பு பகுதியைச் சேர்ந்தவர்கள் என வும் சுங்கப் பேச்சாளர் தெரிவித் தார்.

இவர்கள் தமது உடல்கள் மற்றும் கைப்பைகளில் மொத் தம் 6 கிலோ தங்க நகைகள் மற் றும் தங்க பாளங்களை மறைத்து வைத்து கடத்தி வந்துள்ளதாக சுங்கத்தினர் தெரிவித்தனர். (அ)

# இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவுக்கு எதிரான நீதிமன்ற அவமதிப்பு வழக்கு ஒக்ரோபர் 27ஆம் திகதி

கொழும்பு, செப். 28

நீதிமன்றத்தை அவமதித்த தாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள முறைப்பாடு களை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 27ஆம் திகதி விசார ணைக்கு எடுத்துக் கொள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று தீர்மானித்துள்ளது.

இந்த மனுக்கள் மேன்முறை யீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதியரசர் நிஷங்க பந்துல கரு ணாரத்ன மற்றும் சமத் மொரா யஸ் ஆகியோர் அடங்கிய நீதி யரசர்கள் குழாம் முன்னிலை யில் நேற்று அழைக்கப்பட்டது.

அப்போது, பிரதிவாதியான சனத் நிஷாந்தவும் நீதிமன்றத் தில் ஆஜராகியிருந்தார்.

இந்த முறைப்பாடுகள் தொட ரில் சாட்சியங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் பிரதி வாதிகளுக்கு சாட்சியங்களை ஆராய அனுமதி வழங்கப்பட் டுள்ளதாகவும் அது தொடர்பான அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட் டுள்ளதாகவும் சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான பிரதி சொலி சிட்டர் ஜெனரல் லக்மினி கிரி ஹாகம நீதிமன்றில் தெரிவித்தார்.

இதன்படி, முறைப்பாடு தொடர்பான விசாரணைக்கு திகதியை நிர்ணயிக்குமாறு பிரதி சொலிசிட்டர் ஜெனரல் நீதிமன்றில் கோரினார்.

அதன்படி, மேன்முறையீட்டு நீதிமன்றம் இது தொடர்பான முறைப்பாடுகளை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 27ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள் ளும் திகதியை நிர்ணயித்துள் ளது.

பொதுஜன பெரமுனவின் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது சனத் நிஷாந் தவுக்கு எதிராக நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டின் பேரில் இந்த மூன்று முறைப்பா டுகளும் முன்வைக்கப்பட்டுள் ளன.

இலங்கை நீதித்துறை அதிகா ரிகள் சங்கம், சட்டத்தரணிக ளான பிரியலால் சிறிசேன மற் றும் விஜித குமார ஆகியோர் இந்த முறைப்பாடுகளை முன் வைத்தனர். (அ)

# சாய்ந்தமருது அல்ஹிலாலில் சித்திர, கைப்பணி கண்காட்சி



அம்பாறை, செப். 28

சாய்ந்தமருது அல்ஹிலால் வித்தியாலய மாணவர்களால் வரையப்பட்ட, "மாணவர்களின் மனதில் தோன்றும் சித்திரங்கள்" எனும் தலைப்பில் சித்திர, கைப் பணிக் கண்காட்சி பாடசாலை மட்டத்தில் ஆரம்பப் பிரிவு, இடைநிலைப் பிரிவு என இரு பிரிவுகளாகவும் மற்றும் பண்டிகைக் கால உணவுக் கண்காட்சி எனும் தலைப்பில் அமைந்த நான்கு இனத்தைச் சேர்ந்த மக்களின் பெருநாள் உணவுக் கண் காட்சியும் பாடசாலையில் கடந்த திங்கள்கிழமை நடைபெற்றது.

பாடசாலையின் அதிபர் யூ.எல். நஸார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், கல்முனை வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பீ. ஜிஹானா ஆலிப் நாடாவை வெட்டி அங்குரார்ப் பணம் செய்து வைத்தார்.

இந்நிகழ்வில், சாய்ந்தமருது கோட்டக் கல்விப் பணிப்பாளர் என்.எம். மலீக், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு அங்கத்தவர் பொறியலாளர் எம். சீ. கமால் நிசாத், கல்முனை ஸாஹிறாக் கல்லூரி முன்னாள் அதிபர் ஐ.எல். ஹம்ஸா, அல்-ஹிலால் வித்தியாலய பிரதி அதிபர்களான நுஸ்ரத் பேகம், ஏ.பி. ஷெறோன் டில்ராஸ், பாடசாலையின் பழைய மாணவர் சங்க செயலாளர் எம்.ஐ. சர்ஜூன் மற்றும் அல்-ஹிலால் வித்தியாலய முன்னாள் அதிபர் ஐ.எல். ஏ.மஜீத் அத்துடன் பாடசாலை அபிவிருத்திச் சங்க பிரதிநிதிகள், பழைய மாணவர் சங்க பிரதிநிதிகள், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இக்கண்காட்சியின்போது பல்வேறு முறைகளைப் பயன்படுத்தி வரையப்பட்ட சித்திரங்கள் மாத்திரமன்றி, மாணவர்களினால் செய்யப்பட்ட கைவினைப் பொருட்களும் காட்சிப் படுத்தப்பட்டிருந்தன.

போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்கள் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

# மட்டக்களப்பில் விபத்து இரு இளைஞர்கள் பலி!





மட்டக்களப்பு, செப். 28

மட்டக்களப்பு - கொழும்பு பிரதான வீதி சந்திவெளி கோரக்களி மடு பகுதியில் கனரக வாகனத்துடன் மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதிய விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்கள் உயிரிழந்தனர்.

நேற்று முன் தினம் இரவு இடம்பெற்ற இந்த விபத்து தொடர்பில் கனரக வாகனத்தின் சாரதியை கைது செய்துள்ளதாக சந்திவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை சுங்கான்கேணியை சேர்ந்த 22 வயதுடைய சண்முகதாஸ் அன்புதாஸ், மற்றும் கிரான் பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதுடைய வடிவேல் தர்மராஜ் என்ற இருவருமே விபத்தில் உயிரிழந்துள்ளனர்.

மட்டக்களப்பு-கொழும்பு பிரதான வீதி சந்திவெளியில் சந்திவெளி பொலிஸ் நிலைய போக்குவரத்து பொலிஸார் சம்பவதினமான நேற்று முன் தினம் இரவு 9 மணியளவில் வீதி போக்குவரத்து சோதனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

இதன்போது மோட்டார் சைக்கிள் ஒன்றில் பயணித்த இருவரை பொலிஸார் நிறுத்துமாறு சைகை காட்டியபோதும் நிறுத்தாது அங்கிருந்து வேகமாக தப்பிச் சென்றபோது வீதியில் எதிரே வந்த கனரக வாகனத்துடன் மோட்டார் சைக்கிளில் மோதி விபத்துக்குள்ளானது.

இதில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன் மற்றையவர் படுகாயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

கனரக வாகன சாரதியை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)



அக்கரைப்பற்று-கல்முனை பிரதான வீதி ஒலுவில் பிரதேசத்தில் நேற்று முன் தினம் வீதியிலிருந்த மரம் கார் மீது விழுந்து போக்குவரத்து சிறிது நேரம் ஸ்தம்பிதமடைந்தது. (அ)

# நாய்களுக்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றும் பணிகள் ஆரம்பம்!

அம்பாறை, செப். 28

இன்று அனுஸ்டிக்கப்படவுள்ள உலக நீர் வெறுப்பு நோய் தினத்தையொட்டி கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குட்பட்ட பல்வேறு பகுதிகளிலும் தொற்று நோய் பிரிவு மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள் இணைந்து விஷர் நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன.

குறித்த நடவடிக்கைகளின் போது பொதுமக்கள் பூரண ஒத்துழைப்பை வழங்கி வருகின்றனர். (அ)

# மோசமான கடலரிப்பால் காவு கொள்ளப்படும் தம்பிலுவில் தம்பையா சுவாமிகளின் சமாதி!

அம்பாறை, செப். 28

திருக்கோவில் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள மிகவும் மோசமான கடலரிப்பை அடுத்து, தம்பிலுவில் திருநாவுக்கரசு நாயனார் குருகுல ஸ்தாபகர் அமரர் தம்பையா சுவாமிகளின் சமாதி காவு கொள்ளப்படும் ஆபத்தை எதிர் நோக்கி இருக்கின்றது.

அந்த பிரதேசத்திலுள்ள தென்னந்தோப்பில், இதுவரை சுமார் 200 தென்னை மரங்கள் மற்றும் 12 கிணறுகள் இதுவரை கடலரிப்பால் கொள்ளப்பட்டிருக்கின்றன.

கடந்த சில நாட்களாக அங்கு இடம் பெறுகின்ற மோசமான கடலரிப்பால் தம்பையா சமாதி ஆலயமும் கடலுக்குள் காவு கொள்ளப்படும் பாரிய அபாயம் நிலவியதை குருகுலப் பணிப்பாளர் கண.இராஜரத்தினம் அறிந்து உடனடியாக பிரதேச செயலாளருக்கும், கடலோர பாதுகாப்பு திணைக்கள மாகாணப் பணிப்பாளர் பொறியியலாளர் கே.துளசிதாசனுக்கும் அறிவித்தார்.



மாகாண பணிப்பாளர் எந்திரி கே.துளசிதாசன் உடனடியாக செயல்பட்டு 100 மண் மூடைகளை அங்கு அடுக்குவதற்கு உத்தரவிட்டார்.

அதன்படி, அங்கு கடலோரப் பாதுகாப்பு திணைக்களத்தினரும் குருகுல இல்லமாணவர்களும் சிவதொண்டர் அணியும் அஜந்தன் தலைமையில் சிறப்பாக செயற்பட்டு பாதுகாப்பு மண் மூடைகளை அடுக்கினார்கள். (அ)

# போட்டிகளில் சாதனை படைத்த மாணவர்களை வாழ்த்தும் நிகழ்வு







மட்டக்களப்பு, செப். 28

கிழக்கு மாகாண விளையாட்டுப் போட்டியில் சாதனை படைத்த மாணவர்களை வாழ்த்தும் நிகழ்வு மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் நேற்று முன் தினம் செவ்வாய்கிழமை குறிஞ்சாமுனை பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மேற்கு வலயக்கல்விப்பணிப்பாளர் யோகேந்திரா ஜெயச்சந்திரன் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்பு மேற்கு வலயத்தில் சாதனை படைத்த மாணவர்களையும் அதற்கு உறுதுணையாக இருந்த விளையாட்டு பயிற்றுவிப்பாளர்கள், ஆசிரியர்கள், கல்வித் திணைக்கள அதிகாரிகள் மலர் மாலை அணிவித்து பாண்ட் வாத்தியத்துடன் வலயக்கல்வி அலுவலகத்திலிருந்து குறிஞ்சாமுனை பாடசாலை மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

தொடர்ந்து மங்கல விளக்கேற்றல், இறைவணக்கம், வரவேற்பு நடனம் இடம்பெற்றது.

அதனையடுத்து மட்டக்களப்பு மேற்கு வலயத்திலிருந்து மாகாண மட்ட போட்டியில் சாதனை படைத்த 102 மாணவர்களுக்கும் வாழ்த்து தெரிவித்து நினைவுப் பரிசுகளும், வெற்றிக் கிண்ணங்களும் கல்வித்திணைக்கள அதிகாரிகளால் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக்கல்விப் பணிப்பாளர்கள் ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள் என பலர் கலந்து கொண்டனர். (அ)

# திருமண மண்டபத்தில் தீ பிடித்து 113 பேர் பலி!

## ஈராக்கில் துயரச் சம்பவம்

பக்தாத், செப். 28

**ஈராக்கின் நினிவே மாகாணத்தில் ஹம்தானியா மாவட்டத்தில் நேற்று முன் தினம் புதன் கிழமை திருமண விருந்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 100க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். 150 பேர் காயமடைந்தனர்.**

செய்தி நிறுவனமான ரொய்ட்டர்ஸின் அறிக்கையின்படி, நினிவே துணை ஆளுநர் ஹசன் அல்-அல்லாக், இறந்தவர்களின் எண்ணிக்கை 113 ஆக உள்ளது என்று கூறினார்.

அரச ஊடகத்தை மேற்கோள் காட்டி, ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டது.

கொண்டாட்டத்தின்போது பட்டாசுகள் கொளுத்தப்பட்ட பின்னர், அல்-ஹம்தானியா நகரில் உள்ள ஒரு பெரிய நிகழ்வு மண்டபத்தில் தீ விபத்து நிகழ்ந்தது. முதற்கட்ட தகவல்களின்படி, கட்டடம் அதிக எரியக்கூடிய கட்டுமானப் பொருட்களால் கட்டப்பட்டதால் விரைவாக தீக்கிரையானது.

அம்புலன்ஸ்கள் மற்றும் மருத்துவக் குழுவினர் சம்பவ இடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.



உள்ளூர் நேரப்படி இரவு 10.45 மணியளவில் தீ விபத்து ஏற்பட்டதாகவும், சம்பவத்தின் போது நூற்றுக்கணக்கான மக்கள் அங்கு கூடியிருந்ததாகவும் நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

உத்தியோகபூர்வ அறிக்கைகளின்படி, கூட்டாட்சி ஈராக் அதிகாரிகள் மற்றும் ஈராக்கின் அரை தன்னாட்சி குர்திஸ்தான் பிராந்தியத்தால் அம்புலன்ஸ்கள் மற்றும் மருத்துவக் குழுக்கள் அந்த இடத்திற்கு அனுப்பப்பட்டன. (அ)

# ஐந்து மில்லியன் பேருக்கு கனடாவில் உளப் பாதிப்பு



மொன்றியல், செப். 28

கனடாவில் கடந்த 2022ஆம் ஆண்டில் மொத்தமாக ஐந்து மில்லியன் பேருக்கு உளநலப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அந்நாட்டு ஏடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதனடிப்படையில், நாட்டில் உள ஆரோக்கியம் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு பதிவாகியுள்ளதாகவும் கனேடிய புள்ளிவிபரவியல் திணைக்களம் வழங்கி ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.


மேலும், கடந்த ஒரு தசாப்த காலமாக கனேடியர்கள் உள ஆரோக்கிய பிரச்சினைகளினால் பாதிக்கப்படும், சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

கடந்த பத்தாண்டு காலப் பகுதியில் உள ஆரோக்கிய குறைபாடுகளுக்கு உள்ளான 15 வயதுக்கும் மேற்பட்ட கனேடியர்களின் எண்ணிக்கை இரட்டிப்பாக உயர்வடைந்துள்ளது.

அதிகளவான மன அழுத்தம் உள்ளிட்ட பல்வேறு உளச் சுகாதார பிரச்னைகளினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஆண்களை விடவும், பெண்களே அதிகளவில் உளச் சுகாதார தாக்கங்களினால் பாதிக்கப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

# அதிகாரியை 11 முறை கடித்த ஜோ பைடனின் வளர்ப்பு நாய்!



நியூயோர்க், செப். 28

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் வளர்ப்பு நாய் இரகசிய உளவுத்துறை அதிகாரி ஒருவரை 11ஆவது முறையாக கடித்துள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது.

வெள்ளை மாளிகையில் வசிப்பதால் ஏற்பட்ட மன அழுத்தமே விலங்குகளையும் பாதித்துள்ளது என்று வெள்ளை மாளிகையின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

காயமடைந்த அதிகாரி தற்போது சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

# 1,500 இராணுவச் சிப்பாய்கள் நைஜரிலிருந்து வெளியேற்றம்

## பிரான்ஸ் அறிவிப்பு

பாரிஸ், செப். 28

நைஜரில் உள்ள 1,500 பிரான்ஸ் இராணுவ வீரர்களை அங்கிருந்து வெளியேறுமாறு பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரான் அறிவித்துள்ளார்.

மேற்கு ஆபிரிக்க நாடான நைஜர் இதற்கு முன்பு பிரான்ஸ் கட்டுப்பாட்டில் இருந்தது. கடந்த 1960ஆம் ஆண்டுக்கு பின்னர் நைஜர் சுதந்திர நாடாக உருவெடுத்தது.

இருந்தபோதிலும் நைஜரில் தங்கள் நாட்டின் இராணுவ வீரர்கள் 1500 பேரை பிரான்ஸ் நிலை நிறுத்தி இருந்தது.

பிரான்ஸின் இந்த செயற்பாட்டிற்கு நைஜர் நாட்டு ஜனாதிபதி முகமது பாசும் ஆதரவளித்தார்.



இதன் காரணமாக ஜனாதிபதி முகமது பாசுமை பதவியில் இருந்து நீக்கி நைஜரை இராணுவம் தங்களது ஆட்சியின் கீழ் கொண்டுவந்தனர்.

இந்நிலையில் அந்த நாட்டில் நிலை நிறுத்தப்பட்டிருந்த 1500 இராணுவ வீரர்கள் வெளியேற்றப்படுவார்கள் என பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரான் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அணை உடைந்து ஆயிரக்கணக்கானோர் மரணம் லிபியாவில் எட்டு அரச அதிகாரிகள் கைதாகினர்!

திரிபோலி, செப். 28

லிபியாவில் புயல் காரணமாக இரண்டு அணைகள் உடைந்து வெள்ளப்பெருக்கில் சிக்குண்டு ஆயிரக்கணக்கானவர்கள் உயிரிழந்த விடயம் தொடர்பில் 8 அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த அதிகாரிகளின் தவறான மேலாண்மை, அலட்சியம் ஆகியவையே இந்த அனர்த்திற்கு காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைதான 08 அதிகாரிகளிடமும் தற்போது விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அந்தநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அவர்களுக்கு, 62 லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

லிபியாவில் புயல் காரணமாக இரண்டு அணைகள் உடைந்து வெள்ள நீரில் சிக்கி 4 ஆயிரத்திலிருந்து 11 ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)



# சுற்றுலாத்துறை அபிவிருத்திக்கு மக்களின் மனநிலை மாறவேண்டும்

## இராஜாங்க அமைச்சர் டயானா கமகே கூறுகிறார்

கொழும்பு, செப். 28

**உள்நாட்டு உணவு கலாசாரம் இன்னும் சுற்றுலாத்துறைக்கு அறிமுகப்படுத்தாமல் இருக்கிறது. இதனை அறிமுகப்படுத்தாதவரை சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்ய முடியாது. அத்துடன், சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்ய எமது மனநிலை மாற வேண்டும் என சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயனா கமகே தெரிவித்தார்.**

**சர்வதேச சுற்றுலா தினத்தை முன்னிட்டு சுற்றுலா இராஜாங்க அமைச்சில் இடம் பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு கூறினார்.**

**அவர் மேலும் தெரிவிக்கையில்-**

நாட்டுக்கு அதிகம் வருமானத்தை ஈட்டித்தரக்கூடிய துறையே சுற்றுலாத்துறையாகும். என்றாலும் கடந்த 5 வருடங்களில் ஈஸ்டர் குண்டுத்தாக்குதல், கோவிட் தொற்று, பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் ஸ்திரமற்ற நிலைமைகள் காரணமாக சுற்றுலாத்துறை வீழ்ச்சியடைந்திருந்தது. என்றாலும் தற்போது நாடு படிப்படியாக ஸ்திரநிலைக்கு வருவதன் மூலம் சுற்றுலா பயணிகளின் வருகையும் தற்போது அதிகரித்துள்ளது. கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் சுற்றுலா பயணிகளின் வருகை குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்திருக்கிறது.

அத்துடன், ஒரு மனிதனுக்கு அத்தியாவசியமாக தேவைப்படுவது 3 விடயங்களாகும். அதில் உணவு, பானம் பிரதானமானதாகும். அதன் பிறகு தங்குவதற்கு வீடு மற்றும் ஆடை. அந்த வகையில் சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வரும்போது அவர்கள் பல்வகையான உணவு




வகைகளை உட்கொள்ள ஆசைப்படுவார்கள். எமது நாடுக்கு என உணவு கலாசாரம் ஒன்று இருக்கிறது. ஆனால் எமது உணவு கலாசாரம் இதுவரை சுற்றுலா பயணிகளுக்கு அறிமுகப்படுத்தப்படாமல் இருக்கிறது. எமது உணவு கலாசாரம் சுற்றுலாத்துறைக்கு அறிமுகப்படுத்தாதவரை எமது சுற்றுலா துறையை அபிவிருத்தி செய்ய முடியாது.

அதேபோன்று, எமது நாட்டில் இருக்கும் ஹோட்டல் பாடசாலைகளின் கல்வி பட்டப்படிப்பு வரை கொண்டுசெல்ல வேண்டும். ஹோட்டல் தொழிற்சாலை தொடர்பான பயிற்சிகள் இங்கு வழங்கப்படுகின்றன. ஹோட்டல் பாடசாலைகள் மேலும் அதிகரிக்கப்பட வேண்டும். அதேபோன்று சுற்றுலா பிரதேசங்களில் இரவு வியாபார நிலையங்கள் அதிகரிக்கப்பட வேண்டும். ஆனால் எமது நாட்டில் இரவு 10 மணியுடன் வியாபார நிலையங்கள் மூடப்படும் நிலையே இருந்து வருகிறது. இந்த நிலை மாறவேண்டும்.

அத்துடன், நாட்டில் சுற்றுலா துறையை அபிவிருத்தி செய்ய நாட்டு மக்களின் மன நிலை மாறவேண்டும். பாராளுமன்றத்தில் இது தொடர்பாக பல தடவைகள் தெரிவித்திருக்கிறேன். ஆனால் எமது பாராளுமன்றத்தில் தற்போது இருப்பவர்களில் ஒரு சிலர் பாராளுமன்றத்தில் இருப்பதைவிட வீடுகளில் இருப்பது நல்லது. அதனால் சுற்றுலாத்துறை அபிவிருத்தி செய்ய தேவையான வழிகாட்டல்கள் மற்றும் சட்ட ஏற்பாடுகளை பாராளுமன்றமே மேற்கொள்ளவேண்டும்-என்றார்.

# சிறுமியைத் துஷ்பிரயோகம் செய்த இராணுவ அதிகாரிக்கு 15 வருட சிறை!

கொழும்பு, செப். 28

தனது உறவினரின் மகளான சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்த வழக்கில் குற்றம் நிரூபிக்கப்பட்ட ஓய்வு பெற்ற மூத்த இராணுவ அதிகாரி ஒருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி 15 வருட கடுங்காவல் தண்டனை விதித்தார்.

24 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த குற்றத்திற்காக விதிக்கப்பட்ட சிறைத்தண்டனையுடன் சேர்த்து, ரூ.25000 இழப்பீடு வழங்க நீதிபதி உத்தரவிட்டார்.

2009 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 1 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரையில் 16 வயதுக்குட்பட்ட தனது உறவினரின் மகளை பாலியல் பலாத்காரம் செய்ததாக சட்டமா அதிபர் பிரதிவாதிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்தார்.

இது தொடர்பான நீண்ட விசாரணையின் முடிவில், குற்றம் சாட்டப்பட்டவர் மீதான குற்றச்சாட்டை நியாயமான சந்தேகத்திற்கு இடமின்றி அரசுத் தரப்பு நிரூபித்துள்ளதாகவும், தொடர்புடைய குற்றச்சாட்டுகளில் அவர் குற்றவாளி என்றும் நீதிபதி தீர்ப்பளித்தார்.

(அ)

# 277 மருந்துகளுக்கு தட்டுப்பாடு!

கொழும்பு, செப். 28

இந்தியா மற்றும் பங்களாதேஷிலிருந்து நேரடியாக மருந்துகளைக் கொள்வனவு செய்ய சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் இருநாட்டு சுகாதார அமைச்சர்களுடன் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல கலந்துரையாடியுள்ளதாக சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் வைத்தியர் சமன் ரத்நாயக்க தெரிவித்தார்.

தற்போது 277 மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. பற்றாக்குறையை நிவர்த்திப்பதற்காக நாடுகளுக்கு இடையில் மருந்துகள் கொள்வனவு




செய்யப்படவுள்ளன. விலைமனு கோருவதில் ஏற்படும் தேவையற்ற கால தாமதத்தைக் குறைக்கும் வகையில் இந்த புதிய முறை அமுல்படுத்தப்படவுள்ளதாக சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் வைத்தியர் சமன் ரத்நாயக்க கூறினார்.

# பஸ்ஸில் 20 பவுண் நகைகளை திருடிய 2 பெண்கள் உட்பட நான்கு பேர் கைது!

மன்னார், செப். 28

மன்னாரில் இருந்து திருகோணமலை நோக்கி பயணித்த பஸ்ஸில் 20 பவுண் நகைகளை திருடியதாக இரு பெண்கள் உட்பட நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என வவுனியா குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னாரில் இருந்து திருகோணமலை நோக்கிப் பயணித்த பஸ்ஸில் முருங்கன் பகுதியில் இருந்து ஆசிரியரான பெண் ஒருவரும் பயணித்துள்ளார்.

குறித்த பஸ் வவுனியா, மாவட்ட செயலகம் முன்பாக பயணித்த போது குறித்த பெண் பஸ்ஸில் இருந்து இறங்கியுள்ளார்.

இதன்போது குறித்த பெண்ணின் கைப் பை திறக்கப்பட்டு அதற்குள் இருந்த அவரது சங்கிலி, மோதிரம் உட்பட 20 பவுண் நகைகள் காணாமல் போனமையை அவதானித்துள்ளார். உடனடியாக பஸ்ஸை நிறுத்தி அதில் தேடியபோதும் நகை கிடைக்கவில்லை.

இதனையடுத்து வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸில் குறித்த ஆசிரியர் முறைப்பாடு செய்தார்.

முறைப்பாட்டையடுத்து வவுனியா தலைமையகப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜயதிலக வழிகாட்டலில் குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி ரத்நாயக்கா தலைமையில் பொலிஸார் துரித விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது குறித்த சம்பவம் தொடர்பில் மகாறம்பைக்குளத்தில் வாடகைக்கு வீடு எடுத்து தங்கியிருந்த புத்தளம், 4 ஆம் கட்டைப் பகுதியைச் சேர்ந்த இரு பெண்களும், இரு ஆண்களும் ஆக 4 பேர் கைது செய்யப்பட்டதுடன் திருடப்பட்டதாக கூறப்பட்ட 20 பவுண் நகை, ஓட்டோ மற்றும் பட்டா ரக வாகனம் ஒன்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணையின் பின் குறித்த நான்கு பேரையும் நீதிமன்றில் முறப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் மேலும் கூறினர்.

(அ)

# சுயநினைவு இழக்கச்செய்து கொள்ளையடிக்கும் கும்பல்!

## மக்களுக்கு பொலிஸார் எச்சரிக்கை

கொழும்பு, செப். 28

பொதுவிடங்களில் பயணிக்கும் பொழுது உணவு பானங்களைக் கொடுத்து சுயநினைவை இழக்கச் செய்து பொதுமக்களின் பொருட்களை கொள்ளையிட்டுச் செல்லும் தரப்பொன்று நாட்டில் செயற்பட்டு வருவதாகவும் இவ்வாறான கொள்ளைச் சம்பவங்களிலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ளுமாறும் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான நிஹால் தல்துவ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஒட்டோச் சாரதி ஒருவருக்கு மயக்க மருந்து கலந்த குளிர்பானத்தைக் கொடுத்து அவரிடமிருந்த பெறுமதியான சொத்துக்களை கொள்ளையிட்டுச் சென்ற சம்பவத்துடன் தொடர்புடைய மூவர் கைது செய்யப்பட்டுள்ள நிலையிலேயே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

முச்சக்கரவண்டி சாரதி போல காட்டிக்கொண்டு அல்லது முச்சக்கர வண்டிகளில் பயணிக்கும் பயணி போன்று காண்பித்து குறுகிய காலப்பகுதிக்குள் நன்கு உரையாடி பயணிகளுக்கு ஒரு வகை பானத்தை அருந்துவதற்கு கொடுத்து சுயநினைவை இழந்த பின்னர் அவர்களிடம் இருக்கும் பெறுமதியான சொத்துக்களை கொள்ளையிட்டு செல்லும் சம்பவங்கள் அண்மையில் அதிகம் பதிவாகியுள்ளன.

இதுபோன்றதொரு சம்பவம் கொழும்பு, கிராண்ட்பாஸ் பகுதியிலும் அண்மையில் பதிவாகியிருந்தது.குறித்த பகுதியில் நபர் ஒருவர் முச்சக்கரவண்டி ஒன்றுக்கு அருகில் இருந்து மயங்கி விழுந்துள்ள சம்பவம் தொடர்பில் மேற்கொண்ட விசாரணையில் 3 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

சம்பவத்தின் போது ஹற்றன் பிரதேசத்தைச் சேர்ந்த சந்திரமோகன் என்ற சந்தேக நபரும், திஹாரி பிரதேசத்தைச் சேர்ந்த பர்ஷத் நிப்ராஸ் எனும் ஒருவரும், மற்றும் அப்துல் சத்தார் மொஹமட் டில்சான் டில்சாத் எனும் சந்தேக நபரும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

சந்தேகநபர்கள் மூவரும் நாடளாவிய ரீதியில் இவ்வாறான கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளதாகவும் சந்தேக நபர்களுக்கு எதிராக ருவன்வெல்ல, வெல்ல வீதிய, மஹரகம, ஹங்வெல்ல, கம்பஹா, பியகம, வெலிமட, வெயங்கொட உள்ளிட்ட பொலிஸ் பிரிவுகளில் இவ்வாறான முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாகவும் அதற்கமைவாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது-என்றார்.

(அ)

# பாடசாலையில் கசிப்பு விற்ற மாணவன் கைது!

கொழும்பு, செப். 28

பிரபல பாடசாலை ஒன்றின் மாணவன் ஒருவன் பாடசாலைக்குள் கசிப்பு விற்பனை செய்து கொண்டிருந்தபோது அந்த பாடசாலையின் ஆசிரியர் ஒருவரால் பிடிக்கப்பட்டு கலவானை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாக கலவானை பொலிஸார் தெரிவித்தனர்.

மாணவர் கடுமையாக எச்சரித்து விடுவிக்கப்பட்டதாக கலவானை பொலிஸார் தெரிவித்தனர். 9ஆம் ஆண்டு படிக்கும் மாணவன் ஒருவரே இவ்வாறு கசிப்பு விற்றுள்ளார்.

குறித்த மாணவன் இந்த கசிப்பை தண்ணீர் போத்தலில் கொண்டுவந்து பாடசாலையில் வைத்து கோப்பையில் ஊற்றி உயர்தர மாணவர்களுக்கு விற்பனை செய்ததாக கலவானை பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

## தமிழ்...

முதலமைச்சர் உள்ளிட்ட தலைவர் களை சந்தித்து உண்மை நிலையை புரிய வைக்க வேண்டும். இதற்கு சக தமிழ் பாராளுமன்ற உறுப்பி னர்கள் ஒத்துழைப்பார்கள் என நம்புகிறேன் என்று கூறியிருக்கிறார் கடற்றொழில் அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா.

அத்துடன், “இந்திய மீனவர்களைக் கைது செய்யும் செயல்பாட்டில் இலங்கை கடற்படையினர் தயக்கம் காட்டுகின்றனர்” என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நேற்று புதன்கிழமை மாவட்ட ஒருங்கிணைப்பு குழுத் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் இணைத் தலைவரான வடக்கு மாகாண ஆளுநர் பி. எம். எஸ். சார்ள்ஸ் தலைமையில் நடைபெற்றது.

மீனவர்களின் பிரச்னை தொடர்பில் பேசப்பட்டபோது, கருத்து வெளியிட்ட அமைச்சர் டக்ளஸ்,

சட்டவிரோதமாக இலங்கை கடற்பரப்புக்குள் நுழையும் இந்திய மீனவர்களை கட்டுப்படுத்தும் செயல்பாட்டை கடற்படையினர் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றனர். எனினும், இந்திய மீனவர்களை கைது செய்யும் செயல்பாட்டில் இலங்கை கடற்படையினர் தயக்கம் காட்டுகின்றனர்.

“தமிழக கடற்றொழிலாளர்களின் அத்துமீறல்களை கட்டுப்படுத்த கடந்த 20 வருட காலமாக முயற்சித்து வருகின்ற போதிலும் அதனை முழுமையாக கட்டுப்படுத்த முடியவில்லை.

“நான் இந்த விடயம் தொடர்பில் ஒரு தீர்மானத்துக்கு வந்திருக்கின்றேன். தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் இந்தியா சென்று இந்த விடயம் தொடர்பில் தமிழக முதலமைச்சருடன் கலந்துரையாடவுள்ளேன். இதற்கு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒத்துழைப்பார்கள் எனவும் நம்புகின்றேன்” - என்றார். (ஐ)

## சீனா...

புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடவேண்டும் என கடன் வழங்கிய நாடுகள் குழுவில் உள்ள சில நாடுகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

இது குறித்த கலந்துரையாடல்கள் தனிப்பட்ட முறையில் இடம்பெறுவதால் இதனை தெரிவித்தவர்கள் தங்களை அடையாளப்படுத்த விரும்பவில்லை.

இலங்கைக்கு அதிக கடன்வழங்கிய நாடுகளில் பிரதானமான நாடான சீனா இந்த குழுவில் இடம்பெறவில்லை என்பது டன் தனியான இரு தரப்பு பேச்சுகளை முன்னெடுத்துள்ளது.

மொராக்கோவில் இடம்பெறவுள்ள மாநாட்டுக்கு முன்னர் சீனா இல்லாத ஏனைய முக்கிய கடன் வழங்கிய நாடுகள் நகல் வடிவ ஆவணம் ஒன்றை தயாரித்து அதில் இலங்கையின் கையெழுத்தை பெறும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளன.

இந்த உடன்படிக்கைக்கான காலஎல்லையை தெளிவாக தெரிவிக்க முடியவில்லை என பாரிஸ் கிளப்பின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் இது குறித்த கேள்விக்கு பதிலளிக்கவில்லை

இலங்கைக்கு கடன்வழங்கிய அனைத்து தரப்பினரும் எங்களுடன் ஆக்கபூர்வமான ஈடுபாட்டை வெளிப்படுத்துகின்றனர் என இலங்கையின் இராஜாங்க அமைச்சர் செகான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு கடன் வழங்கிய நாடுகள் சீனா குறித்து பொறுமையிழந்து விட்டனரா அல்லது சீனாவுக்கு அழுத்தத்தை கொடுக்கும் தந்திரோபாயமா இது என்பது தெரியவில்லை.

இலங்கை சிறிய பொருளாதார நாடு என்ற போதிலும் இலங்கையின் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் கடன் விவகாரங்களில் சீனாவின் பங்களிப்பை மதிப்பிடுவதற்கான ஒன்றாக கருதப்படுகின்றது - என்றும் அந்த செய்தியில் கூறப்பட்டுள்ளது. (ஐ)

## வல்லிபுர...

சக்கரத்தாழ்வார் தேரில் ஆரோகணித்து வலம் வந்து பக்தர்களுக்கு அருள் பாலிப்பார்.

நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சமுத்திர தீர்த்தமும் மறுநாள் சனிக்கிழமை கலை கேணித் தீர்த்தமும் இடம்பெறவுள்ளன.

திருவிழாவை ஒட்டி ஆலயத்துக்கு பக்தர்கள் செல்ல வசதியாக போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. அத்துடன், அடியார்கள் தங்க நகைகள் அணிந்து வருவதை தவிர்க்குமாறும் ஆலய நிர்வாகம் கேட்டுள்ளது. (ஐ-02)

## சர்வதேச...

உரிமை கள் பேரவையில் “கவனம் தேவைப்படும் மனித உரிமைகள் சூழ்நிலை கள்“ தொடர்பில் நேற்று நடந்த விடயம்- 4இன் கீழான பொது விவாதத்தில் கலந்து கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கத்தால் விடுதலைப் புலிகள் இயக்கம் தோற்கடிக்கப்பட்டு பதி னான்கு ஆண்டுகள் கழிந்துள்ள நிலையில், தமிழர் தாயக மான வடக்கு - கிழக்கில் திட்டமிட்ட சிங்கள - பௌத்த மயமாக்கல் நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கப்பட்டு துரித கதியில் நடத்தப்பட்டு வருகின்றன.

குருந்தூர்மலையிலுள்ள தமிழர்களின் பழமையான வழிபாட்டிடம் அழிக்கப் பட்டு, அந்த இடத்தில் நீதிமன்ற உத்தரவையும் மீறி பௌத்த விகாரை ஒன்று அமைக் கப்பட்டு வருகிறது. இதுபோன்று சிங்கள மக்கள் வசிக்காத தமிழர் தாயகப் பகுதிக ளான நாயாறு, தையிட்டி, நாவற்குழி, மாங்குளம் சந்தி, கச்சல்சமணங்குளம், கன்னியா வெந்நீருற்று போன்ற இடங்களிலும் பௌத்த தலங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

இவ்வாறு சட்டவிரோதமாக பௌத்த தலங்கள் கட்டப்படும் சில இடங்களில் அரச அனுசரணையுடனான சிங்கள குடியேற்றங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில், மயிலத்த மடு - மாதவனை பகுதிகளில் மூன்று இலட்சம் கால்நடைகள் பயன் பெறக்கூடிய மேய்ச்சல் நிலங்களில் வசித்து வந்த தமிழர்கள் துரத்தியடிக்கப்பட்டு, நீதிமன்ற உதரவை மீறி அந்த இடங்களில் சட்ட விரோதமான முறையில் சோள பயிர்ச் செய்கையில் ஈடுபடுபவர்களான சிங்கள இனத்தவர் குடியேற்றப்படுகின்றனர்.

மாதுறு ஓயா வலது கரை மேம்பாட்டு திட்டத்தைப் பயன்படுத்தி இனப்பரம்பலை மாற்றும் விதத்தில் தமிழர்கள் வெளியேற் றப்பட்டு அந்த இடங்களில் சிங்களவர்கள் குடியேற்றப்படுகின்றனர்.

அரசின் மேற்படி இனவாத நடவடிக்கை களுக்கு எதிர்ப்பை வெளிப்படுத்தும் வகையில் ஜனநாயக ரீதியில் போராட் டங்களை மேற்கொள்பவர்கள்மீது பயங்கர வாதத் தடைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இலங்கை அரசாங்கமானது இந்தச் சட்டத்தை நீக்குவதாக ஐ. நா. மனித உரிமைகள் சபைக்கு உறுதியளித்திருந்தது. எனது சகாவான செல்வராசா கஜேந்திரன் கைதுசெய்யப்பட்டு துன்புறுத்தப்பட்டதுடன், அவர் மீது வன்முறையை கட்ட விழ்த்து விட்டதையும் இங்கு சுட்டிக்காட்டலாம்.

2012ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக இந்த விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றபோதிலும், இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கைகள் எதுவித மாற்றமுமின்றித் தொடர்ந்த வண்ணமிருக்கின்றன. பதினைந்து வருடங்களாகத் தொடரும் இந்த நிலைமையை அங்கத்துவ நாடு கள் உற்றுநோக்கினால் இலங்கை அரசாங் கத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன் நிறுத்த வேண்டிய அவசியம் புலப்படும் - என்றார். (ஐ)

## முழுமையான...

பாராட்டத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது என்றும் குறிப்பிட்டது.

இது தொடர்பில் ஐ. எம். எவ். பணிக்குழு வெளியிட்ட முழு அறிக்கை வருமாறு,

“இலங்கை மக்கள் பலத்த சவால்களுக்கு முகங்கொடுத்து குறிப்பிடத்தக்க மீள்தன்மையை வெளிப்படுத்தியுள்ளனர். கடினமான ஆனால், மிகவும் தேவையான சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை பாராட்டத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது.

பொருளாதாரம் ஸ்திரத்தன்மைக்கான தற்காலிக அறிகுறிகளை காட்டுவதால் இந்த முயற்சிகள் பலனளிக்கின்றன. பணவீக்கம் செப்ரெம்பர் 2022இல் உச்சமாக இருந்த 70 சதவீதத்திலிருந்து 2023 செப்ரெம்பரில் 2 சதவீதத்துக்கும் கீழே குறைந்துள்ளது, இந்த ஆண்டு மார்ச் - ஜூன் காலத்தில் மொத்த சர்வதேச கையிருப்பு 150 கோடி டொலராக அதிகரித்துள்ளது. மேலும் அத்தியாவசிய பொருட்களின் பற்றாக்குறையும் குறைந்துள்ளது.

ஸ்திரத்தன்மைக்கான ஆரம்ப அறிகுறிகள் இருந்தபோதிலும், முழுமையான பொருளாதார மீட்சி இன்னும் உறுதி செய்யப்படவில்லை.

இரண்டாவது காலாண்டில் உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 3.1 சதவிகிதம் சுருங்குகிறது மற்றும் உயர் அதிர்வெண் பொருளாதார குறிகாட்டிகள் தொடர்ந்து கலவையான சமிக்ஞைகளை வழங்குவதன் மூலம் வளர்ச்சி வேகம் குறைவாகவே உள்ளது. சமீப மாதங்களில் கையிருப்பு குவிப்பு குறைந்துள்ளது.

சீர்திருத்த வேகத்தை நிலைநிறுத்துவது பொருளாதாரத்தை நீடித்த மீட்சி மற்றும் நிலையான மற்றும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியை நோக்கிய பாதையில் கொண்டு செல்ல மிகவும் முக்கியமானது. அதிகாரிகள் திட்டத்தின் முதன்மை இருப்பு இலக்குகளை அடைந்து, கடன் நிலைத்தன்மையை மீட்டெடுப்பதற்கான அவர்களின் முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் திட்டத்தின் இந்த முக்கியமான தூணில் உறுதியாக உள்ளனர்.

எவ்வாறாயினும், வருவாய் திரட்டல் ஆதாயங்கள் - கடந்த ஆண்டை ஒப்பிடுகையில் மேம்பட்ட நிலையில் - ஆண்டு இறுதியில் ஆரம்ப கணிப்புகளை விட கிட்டத்தட்ட 15 சதவிகிதம் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஓரளவு பொருளாதாரக் காரணிகள் காரணமாக இருந்தாலும், இந்தப் பற்றாக்குறையை ஈடுசெய்யும் முயற்சிகள் இல்லாவிட்டால், நிதிச் சரி செய்தலின் பொறுப்பு பொதுச் செலவில் விழும். இது அத்தியாவசிய பொது சேவைகளை வழங்கும் அரசாங்கத்தின் திறனை பலவீனப்படுத்தலாம் மற்றும் கடன் நிலைத்தன்மைக்கான பாதையை குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது. வருவாயை அதிகரிக்கவும், சிறந்த நிர்வாகத்தை குறிக்கவும், வரி நிர்வாகத்தை வலுப்படுத்துவது, வரி விலக்குகளை அகற்றுவது மற்றும் வரி ஏய்ப்பை தீவிரமாக அகற்றுவது முக்கியம்.

தொடர்ச்சியான நிச்சயமற்ற தன்மைக்கு எதிராக, வலுவான இருப்பு குவிப்பு மூலம் வெளிப்புற இடையகங்களை மீண்டும் உருவாக்குவதும் முக்கியமானது.

பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதில் இலங்கை மத்திய வங்கியின் வெற்றியைக் கட்டியெழுப்புதல், பண நிதியுதவியைத் தவிர்ப்பது பணவீக்கத்தைக் கட்டுக்குள் வைத்திருக்க உதவும். மற்ற சவால்களில் மின்சார விலை நிர்ணயத்தின் செலவை மீட்டெடுப்பது அடங்கும்.

அரசாங்கம் கட்டமைப்பு சீர்திருத்தங்களில் நிலையான முன்னேற்றம் கண்டுள்ளது. - என்றுள்ளது. (ஐ)

## குருந்தூர்...

விதான பத்திரண தெரிவித்துள்ளார்.

குருந்தூர் ரஜமஹா விகாரை பௌத்த தொல்பொருள் இடமாக தெளிவாக அடையாளம் காணப்பட்டுள்ளது. எனவே, இந்த நிலம் தொல்லியல் ரீதியாக ஒவ்வொரு இலங்கையர்களுக்கும் சொந்தமானது.

இதேவேளை, வடக்கில் அடையாளம் காணப்பட்ட தொல்பொருள் இடங்களை வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடுமாறு அதிகாரிகளுக்கு குழு பணிப்புரை விடுத்துள்ளது.

குருந்தூர் ரஜமஹா விகாரை தொடர்பில் எழுந்துள்ள பிரச்னைகளுக்கு தீர்வு என குறிப்பிட்டு, புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு துறைசார் கண்காணிப்புக் குழுவிடம் பல முன்மொழிவுகளை முன்வைத்துள்ளது. (ஐ)

## புலிகளின்...

தகவல் கிடைத்தது. இதைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை அகழ்வு பணிகள் ஆரம்பமாகின.

நேற்று முன்தினமும் பணி தொடர்ந்திருந்தது. அகழப்பட்ட குழியில் தண்ணீர் ஊற்றெடுத்த நிலையில் நீரிறைக்கும் இயந்திரங்கள் மூலம் தண்ணீரை வெளியேற்றி அகழ்வு பணி தொடர்ந்தது.

எனினும், நேற்றைய தினமும் எந்தப் பொருட்களும் மீட்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஐ.எம்.எவ்...

என அறிவித்துள்ளது.

இரண்டாவது தவணைக்கடன் எப்போதும் வழங்கப்படும என்பது குறித்து நிலையான காலஅட்டவணை எதனையும் தெரிவிக்க முடியாது என்று சர்வதேச நாணயநிதியத்தின் ஆசிய பசுபசுபிக் திணைக்களத்தின் இலங்கைக்கான சிரேஷ்ட தூதுக்குழுவின் தலைவர் பீற்றர் புருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை இரண்டு முக்கிய நோக்கங்களை நிறைவேற்ற தவறிவிட்டது. நாங்கள் திருப்தியடைவதற்கு இரண்டு விடயங்கள் அவசியம் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள் கொள்கைள் சீர்திருத்தங்கள் ஆகியவற்றில் நாங்கள் இணக்கப்பாட்டை எட்டவேண்டும். அதுவே நாங்கள் முன்னேறிச் செல்ல உதவும் அதன் மூலமே நாங்கள் திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்ற முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆகவே, ஒரு விடயத்தில் ஒரு வருடத்தில் குறைபாடுகள் உள்ளதை நாங்கள் காணமுடிகின்றது அந்த குறைபாடுகளை நிவர்த்தி செய்ய முயல்கின்றோம் - என்றார். (ஐ)

## திருகோணமலை...

மேற்கொள்ளப்பட்டு வருதாக மக்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

விகாரையின் கட்டுமானங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த 3ஆம் திகதி மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். தொடர்ந்து கடந்த 9ஆம் திகதி மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் குறித்த பகுதியில் பொரலுகந்த ரஜமகா விகாரை எனும் பெயர் பெயர்ப்பலகை நடப்பட்டிருந்தது.

சிங்கள மக்களின் குடியிருப்பு இல்லாத இந்தப் பகுதியில் விகாரை அமைப்பது இன முறுகலை ஏற்படுத்தும் என்று கூறினர். இதைத் தொடர்ந்து கிழக்கு ஆளுநர் இந்த விகாரையின் கட்டுமானப் பணிகளுக்கு தடை விதித்திருந்தார். இதை பிக்குகள் எதிர்த்திருந்தனர்.

இந்த நிலையில், இரகசியமாக இரவிரவாக தொடரும் விகாரை கட்டுமானத்தை நிறுத்துமாறு ஆளுநரிடம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

# புதிதாக மதுபானசாலைகள் யாழ்ப்பாணத்தில் வேண்டாம்

## அபிவிருத்திக்குழு கூட்டத்தில் சீ.வீ.கே. கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 28

**யாழ்ப்பாணத்தில் புதிய மதுபானசாலைகளை அமைக்க அனுமதி வழங்கக்கூடாது என வடமாகாண அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் கோரிக்கை முன்வைத்தார்.**

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் மாவட்ட செயலகத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்றது.

அதன்போது , தெல்லிப்பழையில் புதிதாக மதுபானசாலை ஒன்றை அமைக்க முயற்சிகள் இடம்பெற்று வருவதாகவும் , அதற்கு பொதுமக்கள் எதிர்ப்பு காட்டி வருவதாகவும் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இதன்போது , அவைத்தலைவர் யாழ்ப்பாணத்தில் புதிதாக எந்த மதுபானசாலைக்கும் அனுமதி வழங்கக் கூடாது என ஒரு தீர்மானத்தைக் கூட்டத்தில் நிறைவேற்றுமாறு கோரிக்கை வைத்தார்.



நியதிகளின் அடிப்படையில், யாழ்ப்பாணத்தில், கள்ளு தவறணைகள் உட்பட 146 மதுபானசாலைகளுக்கான அனுமதிகளை வழங்க முடியும்.

எனவே யாழ்ப்பாணத்தில் எத்தனை உள்ளது என பரிசீலித்த பின்னரே புதியதற்கு அனுமதி வழங்க முடியுமா இல்லையா என தீர்மானிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டதை அடுத்து, அவை தலைவரின் கோரிக்கை கூட்டத்தில் தீர்மானமாக எடுத்துக் கொள்ளப்படவில்லை. (அ)

# வைத்தியசாலையில் சிசு மரணம் மனைவியின் கர்ப்பப்பை அகற்றம்

## கணவர் கிளிநொச்சி பொலிஸில் முறைப்பாடு

கிளிநொச்சி, செப். 28

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்ட தனது மனைவிக்கு சத்திர சிகிச்சையின் மூலம் இறந்த குழந்தை எடுக்கப்பட்டதுடன், மனைவியின் கருப்பையும் அகற்றப்பட்டதற்கு மருத்துவத் தவறே காரணமென குறிப்பிட்டு கணவர் தர்மபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

கடந்த ஜூன் மாதம் 26ஆம் திகதி குழந்தை பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்ட தனது மனைவிக்கு 27ஆம் திகதி சத்திர சிகிச்சை மூலம் இறந்த நிலையில் குழந்தை எடுக்கப்பட்டதோடு, தனது மனைவியின் கருப்பையும் அகற்றப்பட்டுள்ளது. இது மருத்துவத் தவறுகளின் காரணமாக இடம்பெற்றது என முறைப்பாட்டில் அவர் தெரிவித்துள்ளார்.

தனது குழந்தை வயிற்றுக்குள்ளே இறப்பதற்கும், தனது மனைவியின் கருப்பை அகற்றப்படுவதற்கும் மருத்துவர்களின் தவறே காரணம் எனவும் தனது வாழ்க்கையில் இனி குழந்தை பாக்கியமே இல்லாத நிலைமைக்கு தனது குடும்பத்தை தள்ளிவிட்டார்கள் என்றும் தெரிவித்து பாதிக்கப்பட்ட பெண்ணின் கணவன் மேற்படி முறைப்பாட்டை பதிவு செய்துள்ளார். (அ)

# நாணய நிதியத்துக்கு வழங்கிய வாக்குறுதிகளை மீறியது அரசு!

## உதய கம்மன்பில குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 28

அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்திற்கு வழங்கிய வாக்குறுதிகளை மீறியுள்ளதாக பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

பிவித்துரு ஹெல உறுமயவின் தலைமையகத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கத்தின் கொடுக்கல், வாங்கல்களை வெளியிடும் இணையத்தளம் ஒன்றை ஆரம்பிக்க உள்ளதாக அரசாங்கம், சர்வதேச நாணய நிதியத்திடம் வாக்குறுதி வழங்கியிருந்தது.

இந்த வாக்குறுதியானது அரசாங்கம் என்றுமே நிறைவேற்ற போகின்ற வாக்குறுதியல்ல.

அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றப்பட்டுள்ளதன் முன்னேற்றம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் ஜனாதிபதியை சந்திக்க உள்ளனர்.

அரசாங்கம், நாணய நிதியத்திடம் 3 பில்லியன் டொலர்களை கடனாக பெற 100 வாக்குறுதிகளை வழங்கியது.

தற்போது அந்த வாக்குறுதிகளில் 57 வாக்குறுதிகளை நிறைவேற்றப்பட்டிருக்கவேண்டும். எனினும் 38 வாக்குறுதிகளே நிறைவேற்றப்பட்டுள்ளன

அரசாங்கத்தின் வரி வருமானத்தை மார்ச் மாதம் 31 ஆம் திகதியுடன் 650 பில்லியன் வரையும் ஜூன் 30 ஆம் திகதியுடன் ஆயிரத்து 300 பில்லியன் ரூபாவாகவும் அதிகரிக்கவேண்டும் என்ற வாக்குறுதியை அரசாங்கத்தினால் நிறைவேற்ற முடியாமல் போயுள்ளது.

இவ்வாறு மேலும் பல முக்கிய வாக்குறுதிகளை அரசாங்கத்தினால் நிறைவேற்ற முடியவில்லை - என்றார்.

# தனது ஆபாச படங்களை பகிர்ந்த பெண் கைது!

கொழும்பு, செப். 28

பணம் சம்பாதிக்கும் நோக்குடன் தனது ஆபாச காணொலிகளை இணையத்தில் பகிர்ந்த பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்தப் பெண்ணை கைதுசெய்த குற்றப்புலனாய்வுப் பிரிவின் கணினி குற்றப்பிரிவினர் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தினர்.

குறித்த பெண் தனது கணவரின் துணையுடன் ஒரு நிமிட ஆபாச காணொலிக்கு ஆயிரம் ரூபாய் வீதம் என தனது வங்கிக் கணக்கில் பண வைப்பு செய்த நபர்களுக்கு காணொலிகளை இணையத்தில் பகிர்ந்துள்ளார் என்று கணினி குற்றப்பிரிவின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட பெண் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ஐ)

# நாணய நிதியத்துடன் பணியாளர் மட்ட ஒப்பந்தம் மிகவிரைவில் கைச்சாத்தாகும்!

கொழும்பு, செப். 28

சர்வதேச நாணய நிதியத்துடன் அடுத்த சில நாட்களில் இரண்டாவது கடன் தவணையை பெறுவது தொடர்பான ஒப்பந்தத்தில் இலங்கை கைச்சாத்திடப்பட உள்ளது.

அதன் ஒரு பகுதியாக பணியாளர் மட்ட ஒப்பந் தத்தில் இலங்கை கையெழுத்திட உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதனடிப்படையில், பணியாளர் மட்ட ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு முன்னர் இரு தரப்பினரும் சில குறிப்பிட்ட விடயங்களை ஏற்றுக்கொள்ளவேண்டும் என ஜனாதிபதி அலுவலகத்தின் பேச்சாளர் ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

பணியாளர் மட்ட ஒப்பந்தம் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை கைச்சாத்திடப்படவிருந்தபோதிலும், சில பணிகளை மேற்கொள்ள உள்ளதால் இன்னும் சில தினங்களில் ஒப்பந்தம் கைச்சாத்திடும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

# அதிதீவிர மந்த போசணையால் கம்பஹாவின் சிறுவர்கள் பாதிப்பு

கொழும்பு, செப். 28

அதி தீவிர மந்த போசணையால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் அதிகளவில் காணப்படும் மாவட்டமாக கம்பஹா அடையாளம் காணப்பட்டுள்ளது. கொழும்பு மாநகர சபையின் மருத்துவ அதிகாரி ருவான் விஜயமுனி தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்தில் கம்பஹா மாவட்டத்தில் 1,439 சிறுவர்கள் மந்த போசணையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை கொழும்பு மாவட்டத்தில் 320 சிறுவர்கள் மந்த போசணையால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் அதிகமானோர் கொழும்பின் வடக்கு பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரியவந்துள்ளது.

அத்துடன், மந்த போசணையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு பிரதேச சுகாதார பிரிவு பணிமனை வழங்கும் நிவாரண திட்டங்களுக்கு பெற்றோர்கள் அழைத்து வருவதில்லை எனவும் போக்குவரத்து செலவீனங்களே இதற்கு காரணம் எனவும் கம்பஹா மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து போக்குவரத்து செலவீனங்களை வழங்க செஞ்சிலுவை சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர் சந்தன கஜநாயக்க தெரிவித்துள்ளார்.

# பதில் நிதியமைச்சராக ஷெஹான் சேமசிங்க!



கொழும்பு, செப். 28

நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க பதில் நிதி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்று காலை ஜேர்மனிக்கு பயணமானார்.

இந்த நிலையில், ஜனாதிபதி தமது ஜேர்மனிக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை நிறைவு செய்து நாடு திரும்பும் வரையில் நிதியமைச்சரின் கடமைகளை, பதில் நிதியமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள, நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க ஆற்றவுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 28.09.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## மழை குழப்பிய போட்டி:

# புதிய பல சாதனைகள் படைத்தது இங்கிலாந்து




லண்டன், செப். 28

பிரிஸ்டலில் நேற்று முன்தினம் பகலிரவு போட்டியாக நடைபெற்ற இங்கிலாந்து - அயர்லாந்து 3ஆவது ஒருநாள் போட்டி மழையால் ஒரு இன்னிங்ஸ்கூட முழுதும் நிறைவுறாமல் முடிந்து போனது. எனினும், இங்கிலாந்து 31 ஓவர்களில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 280 ஓட்டங்களை விளாசி பல துடுப்பாட்ட சாதனைகளை படைத்தது. 31 ஓவர்களுக்குப் பிறகு மழையால் ஆட்டம் நடக்கவில்லை. இங்கிலாந்து 3 போட்டிகள் கொண்ட தொடரை 1-0 என்று வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணியில் தொடக்க வீரர் பில் சால்ட் 28 பந்துகளில் 7 பௌண்ட்ரிகள் 4 சிக்ஸர்களுடன் 61 ஓட்டங்களை விளாச மற்றொரு தொடக்க வீரர் ஃபில் ஜொக்ஸ் 3 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்களுடன் 22 பந்துகளில் 39 ஓட்டங்களை அடித்து நொறுக்கினார்.

ஜாக் கிராவ்லி தன் பங்குக்கு 42 பந்துகளில் 4 பௌண்ட்ரிகள் 2 சிக்ஸர்களுடன் 51 ஓட்டங்களை விளாசினார். இவர்கள் அனைவருக்கும் மேலாக இங்கிலாந்து டெஸ்ட் தொடக்க வீரர்பென் டக்கெட் 78 பந்துகளில் 12 பௌண்ட்ரிகள் 2 சிக்ஸர்களுடன் 107 ஓட்டங்களை நொறுக்கினார். இதில் சில பல சாதனைகளை காலி செய்தது இங்கிலாந்து.

சமீபகால ஆக்ரோஷ அணுகுமுறையை கைவிடாமல் ஆடிய இங்கிலாந்து முதல் ஓவரிலேயே பில் சால்ட் மூலம் அதிரடி தொடக்கம் கண்டது. அயர்லாந்து பந்துவீச்சாளர் மார்க் அடைரின் முதல் ஓவரிலேயே 3 பௌண்ட்ரிகள் ஒரு சிக்ஸ் என்று 19 ஓட்டங்களை விளாசியதன் மூலம் ஒருநாள் கிரிக்கெட்டின் முதல் ஓவர் அதிக ஓட்டங்கள் சாதனையான 19 ஓட்டஙகள் தென்னாபிரிக்கா சாதனையை சமன் செய்தது. 2003இல் தென்னாபிரிக்காவின் கிரேம் ஸ்மித் 19 ஓட்டங்களை முதல் ஓவரிலேயே விளாசி உலக சாதனை புரிந்தார். அண்டர்சனின் ஓவரிலேயே அவர் இந்த சாதனையை படைத்தார்.

இந்தத் தொடக்கம் நீடித்து, அதிரடியும் தொடர்ந்தது, முதல் 4 ஓவர்களில் சால்ட்- ஜொக்ஸ் கூட்டணி 60 ஓட்டங்களை விளாசினர். 5ஆவது ஓவர் முடிவில் 66, 6ஆவது ஓவர் முடிவில் 84. முதலில் துடுப்பெடுத்தாடிய எந்தவோர் அணியும் ஒருநாள் கிரிக்கெட்டில் முதல் 5-6 ஓவர்களில் இவ்வளவு ஓட்டங்களை அடித்ததில்லை. பில் சால்ட் 6ஆவது ஓவரிலேயே 22 பந்துகளில் அரைச்சதம் எட்டினார். இது இங்கிலாந்தின் 5ஆவது அதிரடி அரைச்சதமாகும்.

இதற்கு முன் லியாம் லிவிங்ஸ்ரன் 17 பந்துகளிலும், இயன் மோர்கன் 21 பந்துகளிலும் ஜொன்னி பெயர்ஸ்ரோ 21 பந்துகளிலும் ஜோஸ் பட்லர் 22 பந்துகளிலும் அரைச்சதம் எட்டினர். 7ஆவது ஓவரில் சால்ட் ஆட்டமிழக்கும்போது இங்கிலாந்தின் மொத்த ஓட்டம் 87. இதில் சால்ட் 28 பந்துகளில் 61 ஓட்டங்கள் பங்களிப்பு செய்தது இன்னொரு சாதனை. சால்ட்டுக்கும், ஜொக்ஸுக்குமான ஓட்டு மொத்த இணைப்பாட்ட ஓட்டவீதம் 12.42. அதிவேக ஒருநாள் தொடக்க இணைப்பாட்டத்தில் இது 6ஆவது இடம். ஆனால், இந்தச் சாதனையின் தனித்துவம் என்னவெனில் முந்தைய 5 சாதனைகளும் இலக்கை விரட்டும்போது வந்ததே, இது முதலில் துடுப்பெடுத்தாடியபோது வந்தது.

பில் சால்ட்டின் 28 பந்து 61 ஓட்டங்கள் என்பது ஒருநாள் கிரிக்கெட்டில் அதிவேக 50 ஸ்கோர் ஆகும். சனத் ஜெயசூர்யா 1996இல் பாகிஸ்தானுக்கு எதிராக 65 பந்துகளில் 134 எடுத்தபோது ஸ்ட்ரைக் ரேட் 206.15, இப்போது பில் சால்ட்டின் ஸ்ட்ரைக் ரேட் 217.85. 15 ஓவர்கள் முடிவில் இங்கிலாந்தின் ஓட்ட எண்ணிக்கை 145ஃ2. 15 ஓவர்கள் முடிவில் இந்த ஓட்டமும் புதிய இங்கிலாந்து சாதனையாகும். 27ஆவது ஓவர் முடிவில் இங்கிலாந்து 250 ஓட்டங்களை எட்டியது. பென் டக்கெட் 78 பந்துகளில் விளாசிய 107 ஓட்டங்கள் அவரின் முதல் ஒருநாள் சதமாகும்.



# ரி-20 போட்டியில் 300 ஓட்டங்கள்

## நேபாளம் அணி புதிய சாதனை!

ஹாங்சோ, செப். 28

சர்வதேச இருபது - 20 கிரிக்கெட்டில் 300 ஓட்டங்களுக்கு மேல் குவித்த முதல் அணி என்ற சாதனையை படைத்துள்ளது நேபாளம். இந்தப் போட்டியில் அதிவேக அரைசதம் மற்றும் சதமும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

19ஆவது ஆசிய விளையாட்டு போட்டி சீனாவின் ஹாங்சோவில் நடைபெற்று வருகிறது. இதில் ஆடவர் கிரிக்கெட்டில் நேபாளம் மற்றும் மங்கோலியா விளையாடின. முதலில் துடுப்பெடுத்தாடிய நேபாளம், 20 ஓவர்களில் 3 விக்கெட்கள் இழப்புக்கு 314 ஓட்டங்கள் எடுத்தது. மங்கோலியா 41 ஓட்டங்கள் எடுத்து தோல்வியை தழுவியது.

நேபாள அணி வீரர்கள் குஷல் மல்லா, 50 பந்துகளில் 137 ஓட்டங்கள் எடுத்தார். தீபேந்திர சிங், 10 பந்துகளில் 52 ஓட்டங்கள் எடுத்தார். அதன் மூலம் இருபது -20 கிரிக்கெட்டில் அதிவேகமாக அரைச்சதம் பதிவு செய்தவர் என்ற சாதனையை அவர் படைத்துள்ளார். 8 சிக்ஸர்கள் அவரின் இன்னிங்ஸில் அடங்கும். 9 பந்துகளில் அவர் அரைச்சதத்தை எட்டினார். இதன் மூலம் 2007இல் இங்கிலாந்து அணிக்கு எதிராக 12 பந்துகளில் அரைச்சதம் பதிவு செய்த யுவராஜ் சிங்கின் சாதனையை அவர் தகர்த்துள்ளார்.

சர்வதேச இருபது - 20 கிரிக்கெட்டில் ஆப்கானிஸ்தான் அணி கடந்த 2019இல் அயர்லாந்து அணிக்கு எதிராக குவித்த 278 ஓட்டங்கள்தான் ஓர் அணி ஒரே இன்னிங்ஸில் எடுத்த அதிகபட்ச ஓட்டங்களாக இருந்தது. அதையும் இந்தப் போட்டியில் நேபாளம் தகர்த்துள்ளது. 26 சிக்ஸர்களுடன் 314 ஓட்டங்களை நேபாளம் எடுத்துள்ளது.

குஷல் மல்லா, 34 பந்துகளில் சதம் பதிவு செய்தார். அதன் மூலம் சர்வதேச இருபது- 20 கிரிக்கெட்டில் குறைந்த பந்துகளில் சதம் பதிவு செய்த வீரராகி உள்ளார். 12 சிக்ஸர்கள் மற்றும் 8 பௌண்ட்ரிகளை அவர் விளாசினார். இதற்கு முன்னர் ரோகித் சர்மா மற்றும் டேவிட் மில்லர் 35 பந்துகளில் சதம் பதிவு செய்திருந்தனர். (ஐ)

# வாய்ப்பு இருந்தால் அஸ்வினுக்கு இடம்!

## இந்திய அணித் தலைவர் ரோகித்

ராஜ்கோட், செப். 28

எதிர்வரும் உலகக் கிண்ணத் தொடரில் இந்திய அணியில் அஸ்வின் இடம்பிடிப்பாரா என்ற எதிர்பார்ப்பு எகிறியுள்ளது. இந்த சூழலில் அது குறித்து தனது கருத்தை அணித் தலைவர் ரோகித் சர்மா தெரிவித்துள்ளார்.

வரும் ஒக்ரோபர் 5ஆம் திகதி இந்தியாவில் உலகக் கிண்ணத் தொடருக்கான இந்திய அணி ஏற்கனவே அறிவிக்கப்பட்டுவிட்டது. இருந்தாலும் ஆசிய கிண்ணத் தொடரின்போது அக்சர் பட்டேல் காயமடைந்தார். அதனால், உலகக்கிண்ண அணியில் அவர் இடம்பிடிப்பாரா என்பது அடுத்த சில நாட்களில் தெரிந்துவிடும். ஏனெனில், அனைத்து அணிகளும் ஐ. சி. சி. வசம் இறுதி செய்யப்பட்ட அணியை தெரிவிக்க வேண்டிய கெடு திகதி நெருங்கியுள்ளது.

இந்த சூழலில்தான் அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான தொடரில் அனுபவ சுழற்பந்து வீச்சாளர் அஸ்வினுக்கு இந்திய அணியில் வாய்ப்பு வழங்கப்பட்டது. அவரும் முதல் இரண்டு போட்டிகளில் தனது திறனை நிரூபித்துள்ளார். இந்நிலையில், உலகக் கிண்ணத் தொடரில் அஸ்வின் இடம் பிடிப்பது குறித்து அணித் தலைவர்




ரோகித் சர்மா கருத்து தெரிவித்துள்ளார்.

“அஸ்வினின் அனுபவம் மற்றும் அவரது அபார திறனை யாராலும் மறுக்க முடியாது. அவர் அபாரமாக பந்து வீசியுள்ளார். அதில், சிறந்த பெறுதியையும் பெற்றுள்ளார். அது அணிக்கு சாதகமாக அமைந்துள்ளது. அவர் அணியில் இடம் பெறும் வாய்ப்பு இருந்தால் அது நிச்சயம் பலன் தரும்” என ரோகித் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான கடைசி ஒருநாள் போட்டியில் இந்தியா விளையாடுகிறது. இந்தப் போட்டி ராஜ்கோட்டில் நடைபெறுகிறது. இதற்காக அணித் தலைவர் ரோகித் மற்றும் விராட் கோலி அணியில் இணைந்துள்ளனர். அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான முதல் இரண்டு ஒருநாள் போட்டிகளில் அவர்கள் விளையாடவில்லை. (ஐ)

# உலகக் கிண்ணத்துடன் நாட்டுக்கு திரும்புவோம்

## பாபர் அஸாம் நம்பிக்கை

லாகூர், செப். 28

சம்பியனாக தாயகம் திரும்ப வேண்டும் என்பதே எங்களது விருப்பம். அதை நிறைவேற்றுவோம் என்று பாகிஸ்தான் அணியின் தலைவர் பாபர் அஸாம் கூறியுள்ளார்.

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் பங்கேற்க இந்தியா புறப்படுவதற்கு முன்பாக பாகிஸ்தான் அணியின் தலைவர் பாபர் அசாம் லாகூரில் பத்திரிகைகளை சந்தித்தார்.

அப்போது, ஓர் அணியாக எங்களது மனவலிமை உயர்ந்த நிலையில் இருக்கிறது. நம்பிக்கையுடன் உள்ளோம். எங்களது சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்த முயற்சிப்போம். களத்தில் சாதிக்க எங்களுக்காக பிரார்த்திக்கும்படி ரசிகர்களை கேட்டுக் கொள்கிறேன்.

நாங்கள் இதற்கு முன்பு இந்தியாவில் விளையாடியதில்லை. அங்குள்ள சீதோஷ்ண நிலை, ஆடுகளத்தன்மை குறித்து ஆராய்ந்துள்ளோம். மற்ற ஆசிய நாடுகளில் உள்ளது போன்ற சூழல்தான் இந்தியாவில் இருப்பதாக அறிகிறோம். அதற்கு ஏற்ப தயாராவோம். உலகக் கிண்ணப் போட்டிக்




கான பாகிஸ்தான் அணியை தலைவராக வழிநடத்த இருப்பது கௌரவமாகும். முதல்-4 இடத்திற்குள் வர வேண்டும் என்பது சிறிய இலக்குதான். சம்பியனாக தாயகம் திரும்ப வேண்டும் என்பதே எங்களது விருப்பம். அதை நிறைவேற்றுவோம் என்று நம்புகிறேன்.

அகமதாபாத்தில் இந்தியாவுக்கு எதிராக மிகப்பெரிய ரசிகர்கள் பட்டாளத்தின் முன் விளையாட இருப்பது பரவசமூட்டுகிறது. எனது திறமைக்கு ஏற்ப மிகச்சிறந்த துடுப்பாட்டத்தை வெளிப்படுத்த முயற்சிப்பேன். ஆசிய கிண்ணக் கிரிக்கெட்டில் தோல்வி அடைந்தாலும் அதில் செய்த தவறில் இருந்து பாடம் கற்றுள்ளோம் - என்றார்.

# காலிஸ்தான் இயக்கத்தால் கனடா, பிரிட்டன், ஆஸ்திரேலியா நாடுகளுடனான இந்திய உறவில் என்ன பாதிப்பு?

அரவிந்த் சாப்ரா

காலிஸ்தான் பிரிவினைவாத அமைப்பின் ஆதரவாளரான ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கடந்த ஜூன் மாதம் கனடாவில் படுகொலை செய்யப்பட்டார். இதன் பின்னணியில் இந்திய ஏஜென்டுகளின் பங்கு இருப்பதற்கான 'நம்பத் தகுந்த" ஆதாரங்கள் இருப்பதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அறிவித்த பின் இந்தியா மற்றும் கனடா நாடுகளுக்கு இடையே கசப்புணர்வு அதிகரிக்கத் தொடங்கியது.

இதனால் இரு நாட்டு உறவில் விரிசல் ஏற்பட்டதுடன் ஒரு பதற்றமான நிலை காணப்படுகிறது. கனடாவைத் தவிர, பிரிட்டன், ஆஸ்திரேலியா போன்ற நாடுகளிலும் சீக்கியர்கள் கணிசமான எண்ணிக்கையில் வசித்து வருகின்றனர். இந்நாடுகளில் இந்திய தூதரகத்தின் முன்பாக சீக்கியர்கள் பங்கேற்ற போராட்டங்களும் அண்மைக் காலங்களில் நடந்துள்ளன. உண்மையில் இந்தப் போராட்டங்கள் எதைக் காட்ட விரும்புகின்றன என்றும், இந்தியாவுடனான இந்நாடுகளின் உறவை இப் போராட்டங்கள் எப்படி பாதிக்கப்போகின்றன என்றும் பலரும் ஆச்சரியத்துடன் கேள்வி எழுப்பினர்.

"காலிஸ்தான் பிரச்னை நீண்டகாலமாக மேற்கத்திய நாடுகளுடனான இந்தியாவின் உறவில் எரிச்சலை ஏற்படுத்தி வருகிறது. ஆனால் 2020-21 விவசாயிகள் போராட்டங்கள் மற்றும் அடுத்தடுத்த நிகழ்வுகளுக்குப் பின்னர் இது மோசமடைந்துள்ளது. இந்தியா தனது இறையாண்மையை குறைத்து மதிப்பதாக குற்றம் சாட்டும் கனடாவின் போக்கு, இருதரப்பு உறவுகளை ஆழமான நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது," என்கிறார் லண்டனில் உள்ள எஸ்ஓஎஸ் பல்கலைக்கழகத்தில் அரசியல் மற்றும் சர்வதேச ஆய்வுகளை கற்பிக்கும் அவினாஷ் பாலிவால்.

இந்தியாவிற்கு வெளியே அதிக சீக்கிய மக்கள் தொகை கொண்ட நாடு கனடா. அங்கு மொத்த சீக்கியர்களின் எண்ணிக்கை சுமார் 7.8 லட்சம். இது மொத்த மக்கள்தொகையில் 2 வீதம் ஆகும்.

2022-23 ஆம் ஆண்டில் கனடாவுடனான வர்த்தகம் 4,109 மில்லியன் டாலர்களாக இருந்தது, இது முந்தைய நிதியாண்டை விட 9 சதவீதம் அதிகம் என்று இந்திய அரசின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.



### கனடாவில் இந்திய புலம்பெயர்ந்தோர்

2018 முதல், கனடாவில் சர்வதேச மாணவர்களுக்கான மிகப்பெரிய ஆதார நாடாக இந்தியா இருந்து வருகிறது. அங்கு இந்திய மாணவர்களின் எண்ணிக்கை 2022 இல் கிட்டத்தட்ட 50 சதவீதம் அதிகரித்து சுமார் 3,20,000 ஆக இருந்தது.

கடந்த 2021-ல் தேர்ந்தெடுக்கப்பட்ட கனடா நாடாளுமன்றத்தின் கீழ் சபையில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 17 எம்.பி.க்கள் உள்ளனர். கனடாவின் புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவராக ஜக்மீத் சிங் செயல்பட்டு வருகிறார்.

அனிதா ஆனந்த் மற்றும் மூன்று இந்திய வம்சாவளி எம்.பி.க்கள் முந்தைய அரசில் அமைச்சராக இருந்தனர். தற்போதைய அரசில் தேசிய பாதுகாப்பு அமைச்சராக சஜ்ஜன் மற்றும் கமல் கெரா ஆகிய இருவருடன் அவர் தொடர்ந்து அமைச்சராகப் பதவி வகித்து வருகிறார்.

'இந்தோ-கனடா சமூகம் இங்கு அரசியல் ரீதியாக மிகவும் சுறுசுறுப்பாகச் செயல்பட்டு வருகிறது. எல்லா கட்சிகளும் அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றன. அவர்கள் மிகவும் அரசியல்மயப்படுத்தப்பட்டவர்களாகவும், அரசியல் ரீதியாக சுறுசுறுப்பாகவும் உள்ளனர்," என்று கனடாவைச் சேர்ந்த பத்திரிகையாளர் ஷமீல் கூறினார்.

### காலிஸ்தான் தொடர்பான அரசியல் செயல்பாடுகள்

1980களில் இருந்து கனடாவில் காலிஸ்தானுக்கு ஆதரவாக அல்லது அது தொடர்பான பிரச்னைகளுக்கு ஆதரவாக போராட்டங்கள் நடந்து வருகின்றன என்று அவர் கூறினார். அவர் எம்மோடு பேசிய போது,



பஞ்சாப்பை தளமாகக் கொண்ட, சீக்கிய மதகுருவாக தன்னை அறிவித்துக்கொண்ட அம்ரித்பால் சிங்கை கைது செய்யக் கோரி மார்ச் மாதப் போராட்டத்திற்குப் பின், 'பஞ்சாபில் ஏதாவது நடக்கும்போதெல்லாம் காலிஸ்தான் ஆதரவு பற்றிய கருத்துக்கள் வெளிப்படும் போது உற்சாகமடையும் ஒரு பிரிவினர் இச் சமூகத்தில் எப்போதும் இருந்திருக்கிறார்கள்," என்றார்.

எனவே, ஹர்தீப் சிங் நிஜ்ஜாரின் மரணத்தைத் தொடர்ந்து பலர் வீதிகளில் இறங்கினர். ஜூலை 8 அன்று, நூற்றுக்கணக்கானோர் அவரது மரணத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். இதுமட்டுமின்றி அவர்களுக்கு எதிராகவும், இந்திய அரசாங்கத்திற்கு ஆதரவாகவும் சிறிய அளவில் போராட்டங்கள் நடந்தன.

இரு தரப்பினரும் பல மணி நேரம் தடுப்புகளால் தடுத்துவைக்கப்பட்டிருந்த போதும், ஒருவரையொருவர் எதிர்த்துக் கூச்சலிட்டனர். அப்போது தடுப்புக்களை உடைக்க முயன்ற ஒரு காலிஸ்தான் சார்பு ஆர்ப்பாட்டக்காரர் கைது செய்யப்பட்டார். வார இறுதிக்கு முன்பே, எதிர்ப்பு பற்றி கவலைகள் எழுப்பப்பட்டன.

டொரொன்டோவில் நடைபெற்ற சில போராட்டங்களின் போது காணப்பட்ட போஸ்டர்களில் 'முடைட ஐனெயை" என்ற சொற்கள் இடம்பெற்றிருந்தன. மேலும், இந்திய தூதரக அதிகாரிகள் கொலைகாரர்கள் என்றும் அவற்றில் கூறப்பட்டிருந்தன.

ஜி 20 சந்திப்பு நடைபெற்ற போது, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும், கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவும் சந்தித்துக்கொண்டனர். அப்போதே இந்த கசப்புணர்வு துளிர் விட்டதாகத் தெரியவருகிறது. அப்போது கனடா பிரதமரிடம் காலிஸ்தான் போராட்டம் பற்றிக் கேட்டபோது, கனடா எப்போதும் கருத்து சுதந்திரத்துக்கு மதிப்பளிக்கும் எனத்தெரிவித்திருந்தார். மேலும், அமைதிவழிப் போராட்டங்களை கனடா ஒருபோதும் எதிர்க்காது என்றும் தெரிவித்திருந்தார்.

அதேநேரம், 'பிரதமர் நரேந்திர மோடி கனடாவுக்கு எதிரான தனது ஆழ்ந்த கவலையை அப்போதே வெளிப்படுத்தியிருந்தார். மேலும், கனடாவில் காலிஸ்தான் ஆதரவு கருத்துக்கள் பரப்பப்படுவதால் இந்தியாவில் அரசுக்கு எதிரான நிலைப்பாடு எடுக்கப்படுவது பற்றியும், தீவிரவாத குழுக்கள் புதிதாக உருவாகுவது பற்றியும் அப்போது அவர் பல்வேறு உண்மைகளை கனடாவுக்குத் தெரியப்படுத்தியிருந்தார்." என்று இந்தியாவும் கடுமையாக எதிர்வினையாற்றியது.

### இருதரப்பு உறவுகள்

"இரு நாடுகளுக்கு இடையேயான உறவு தொடர்ந்து மோசமடைந்து வருவதாகத் தெரிகிறது" என்று டெல்லியை தளமாகக் கொண்ட இன்ஸ்டிடியூட் ஃபார் கான்ஃப்ளிக்ட் மேனேஜ்மென்ட்டின் நிர்வாக இயக்குனர் டாக்டர் அஜய் சாஹ்னி கூறினார். 'காலிஸ்தான் ஆதரவுடன் செயல்படும் புலம்பெயர்ந்த சீக்கிய போராளிக் குழுக்களுக்கு அவர்களின் செயல்பாடுகளை கிட்டத்தட்ட ஊக்குவிப்பதன் மூலம் அதிக ஆதரவை கனடா அளித்து வருகிறது.

மேலும் ட்ரூடோ அரசாங்கம் ஒரு சிறுபான்மை அரசாங்கம் என்பதையும், ஜக்மீத் சிங் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கட்சியால் ஆதரிக்கப்படுகிறது என்பதையும் ஒரு குறிப்பிட்ட அர்த்தத்தில் புரிந்து கொள்ள முடியும். காலிஸ்தான் போராளிகளுக்கு ட்ரூடோவின் அரசு ஆதரவாக உள்ளது. எனவே, அவரது அன்றாட அரசியல் வாழ்வு காலிஸ்தான் ஆதரவுக்குழுக்களிடம் இருந்தே தொடங்குகிறது என்று நீங்கள் கூறலாம். காலிஸ்தான் ஆதரவாளர்களின் எண்ணிக்கை எதுவாக இருந்தாலும், அவர்கள் யாருக்கும் வாக்களிப்பதற்கு முன் பல விஷயங்களைக் கருத்தில் கொண்டு மிதவாதிகளைப் போலல்லாமல் ஒரு தொகுதியாக வாக்களிக்க முடியும்" என்று அவர் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், "இந்திய அரசின் இயல்பு தான் இப்போது பிரச்னையாக உள்ளது. மக்கள் இந்து தேசத்தைப் பற்றி கருத்து தெரிவிக்கும்போது, சீக்கியர்கள் காலிஸ்தான் ஆதரவு வாதத்தை முன்வைக்கின்றனர். மேலும், 'நீங்கள் உங்கள் இந்து-ராஷ்டிராவை எடுத்துக் கொண்டு எங்கள் காலிஸ்தான் அல்லது மத அடிப்படையிலான நாட்டை எங்களுக்குத் தாருங்கள்" என்று அவர்கள் கூறுகிறார்கள்."

ஜஸ்டின் ட்ரூடோ தனது அணுகுமுறையை மாற்றும் வரை, எதிர்காலத்தில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு இயல்பு நிலைக்கு வர வாய்ப்பில்லை என்று முன்னாள் தூதர் அனில் திரிகுனாயத் கூறினார்.




"40 ஆண்டுகளாக, காலிஸ்தான் ஆதரவு அமைப்புகள் கனடாவில் அரசியல் ரீதியாக ஆதரிக்கப்பட்டு வருகின்றன. இந்திய அரசாங்கம் போராளிகளின் பட்டியலை அவர்களிடம் சமர்ப்பித்து, அவர்களுக்கு ஆதாரங்களை வழங்கி வருகிறது. ஆனால் எதுவும் நடக்கவில்லை," என்றார்.

கனடா இந்தியாவுடன் சுமூகமான உறவைப் பேண விரும்பினால், இந்த குற்றச்சாட்டுகளை பகிரங்கமாக வைத்ததுடன், தூதரக அதிகாரிகளை வெளியேற்றும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்காது என்று அவர் கூறினார். இந்தியா வெளிப்படையான பதிலடி கொடுத்ததும், அதன் விளைவு இந்தியாவின் முன் இருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஆனால் கனடா இத்தகைய குற்றச்சாட்டுகளை மறுத்து வருகிறது, எப்போதும் 'கருத்து சுதந்திரத்தை" பாதுகாப்பதாகக் கூறி வருகிறது.

### ஆஸ்திரேலியாவில் இந்திய புலம்பெயர்ந்தோர்

2021 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி, ஆஸ்திரேலியாவில் இந்தியர்கள் 6 லட்சத்து 73 ஆயிரம் பேர் வசிக்கின்றனர் என்ற நிலையில், அதில் 2 லட்சத்து 39 ஆயிரம் பேர் சீக்கியர்களாக உள்ளனர்.

மேலும், 2016 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின் படி, வீட்டில் ஹிந்தி பேசுபவர்களின் எண்ணிக்கை ஆஸ்திரேலியாவில் ஒரு லட்சத்து ஐம்பத்து ஒன்பதாயிரத்து அறுநூற்று ஐம்பத்து மூன்று பேராக இருந்தது.

மெல்போர்னைச் சேர்ந்த பத்திரிக்கையாளர் ருச்சிகா தல்வார் கூறுகையில், "கடந்த பல தசாப்தங்களாக ஆஸ்திரேலியாவில் புலம்பெயர்ந்த இந்தியர்கள் எண்ணிக்கையிலும் செல்வாக்கிலும் அதிகரித்து வருகின்றனர். அவர்கள் மற்ற துறைகளில் இருப்பதைப் போலவே அரசியலிலும் அதிகமாகக் காணப்படுகின்றனர். மருத்துவம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் போன்ற துறைகளில் அவர்களின் நிபுணத்துவம் அனைத்து ஆஸ்திரேலியர்களிடையேயும் பொதுவான பேச்சாக உள்ளது. கூட்டாட்சி மற்றும் மாநில மற்றும் பிரதேச அளவில் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தியர்களாக உள்ளனர்," என்றார்.

இருப்பினும், கனடா மற்றும் இங்கிலாந்துடன் ஒப்பிடுகையில், இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பலர் ஆஸ்திரேலிய அரசியலில் முக்கிய இடத்தைப் பெறவில்லை. லிசா சிங் டாஸ்மேனியாவின் செனட் உறுப்பினரானார். நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட டேனியல் முகே, சமீபத்தில் பொருளாளராகப் பதவி உயர்வு பெற்று, பகவத் கீதையின் மீது பதவி பிரமாணம் எடுத்த ஆஸ்திரேலியாவில் முதல் நபர் என்ற பெருமையைப் பெற்றார்.

இந்திய அரசின் தரவுகளின் படி, 2022-23 ஆம் ஆண்டில் ஆஸ்திரேலியாவுடனான வர்த்தகம் 6,951 மில்லியன் டாலர்களாக இருந்தது, இது முந்தைய ஆண்டை விட 16 சதவீதம் குறைவாக இருந்தது.

(16ம் பக்கம் பார்க்க)

ஈழநாடு



# ஒடுக்குமுறை நீடித்து நிலைக்கக்கூடிய ஒரு தெரிவு அல்ல



கலாநிதி ஜெகான் பெரேரா

அமெரிக்க கண்டத்தில் தனது சர்வதேச வெற்றிகளுக்கு பிறகு ஜனாதிபதி ரணில் விங்கிரமசிங்க நாடுதிரும்பிய நிலையில் நாடு தொடர்ந்தும் இடருக்குள்ளேயே இருக்கிறது. கியூபாவிலும் நியூயோர்க்கிலும் முக்கிய சர்வதேச தலைவர்கள் கலந்துகொண்ட அரங்குகளில் தனது முத்திரையை ஜனாதிபதி பதித்திருக்கிறார்.

கியூபாவில் ஜி 77 உச்சிமகாநாட்டில் வளர்ச்சியடைந்தவரும் நாடுகளின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றின் முக்கியத்துவம் குறித்து விக்கிரமசிங்க உரையாற்றினார். 21 ஆம் நூற்றாண்டில் வெளிக்கிளம்பும் தொழில்நுட்ப பிளவைப் (**Technological divide**) பற்றியும் அந்த இடைவெளியை நிரவுவதற்கு எண்ணிம வாக்கத்தையும் (**Digitalization**) செயற்கை நுண்ணறிவு (**Artificial Intelligence**) போன்ற புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்திக்கொள்ளவேண்டிய அவசியம் பற்றியும் அங்கு அவர் பேசானார். புதிய ஹவானா பிரகடனத்தை ஆதரிப்பதில் இலங்கையின் கடப்பாட்டையும் உறுதிப்படுத்திய அவர் சர்வதேச மன்றங்களில் ஜி 77 மற்றும் சீனாவின் கூட்டுக் குரலுக்கு மதிப்பளிக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் அரச தலைவர்கள் மத்தியில் தனதுரையில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் உறுப்புரிமையின் விரிவாக்கம் உலக சமாதானத்துக்கு அவசியம் என்று வலியுறுத்தியபோது விக்கிரமசிங்க சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் தனது அனுபவத்தை பகிர்ந்துகொண்டார். பொருளாதாரம், நிதி, நிறுவனக்கட்டமைப்பு மற்றும் நல்லிணக்க முனைகளில் மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் நல்லெண்ணத்தையும் நம்பிக்கையையும் மீளக்கட்டியெழுப்புவதை நோக்கியும் பொருளாதார நிலயுறுதிப்படுத்தல் மற்றும் மீட்சி நோக்கியும் தன்னால் முன்னெடுக்கப்பட்ட சீரதிருத்தங்களையும் அவர் விளக்கிக்கூறினார்.

ஆனால் இவை தொடர்பில் ஜனாதிபதி கடுமையான சவால்களை எதிர்நோக்குகிறார். கடந்த வருடம் 7 சதவீதத்தினாலும் இவ்வருடத்தின் முதல் காலாண்டில் 11 சதவீதத்தினாலும் சுருக்கமடைந்த நாட்டின் பொருளாதாரம் இரண்டாவது காலாண்டில் மேலும் 3 சதவீதத்தினால் சுருக்கமடைந்து தொடர்ந்தும் கீழ் நோக்கிய திசையிலேயே இருக்கிறது. பொருட்களுக்கு தட்டுப்பாடும் நீண்ட வரிசைகளும் இல்லாமல் இருப்பதற்கு காரணம் பொருளாதாரச் செயற்பாடுகள் மேம்பாடடையத் தொடங்கியது அல்ல மாறாக செலவளிப்பதற்கு மக்களிடம் பணம் இல்லாதமையேயாகும்.

கடந்த வருடம் பணவீக்கம் மக்களின் வருமானத்தை அரைவாசியாக்கியதுடன் உயர்ந்த வரிவிதிப்புகள் வரிவலைக்குள் உள்ள மத்தியதர வர்க்கத்தினரையும் துறைசார் நிபுணத்துவ பிரிவினரையும் கடுமையாக பாதித்த நிலையில் அவர்கள் பெரும் எண்ணிக்கையில் நாட்டைவிட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். அதனால் பொருளாதாரத்துக்கு மிகவும் அவசியமான பல்வேறு துறைகளில் பெரிய இடைவெளி ஏற்படுகிறது.

ஆனால் மத்தியதர வர்க்கத்தையும் துறைசார் நிபுணத்துவ பிரிவினரையும் நேரடியாக பாதித்திருக்கும் வரிச் சீர்திருத்தங்களும் வறிய மக்களைப் பாதித்திருக்கும் விற்பனை வரிகளும் கிடைக்கவிருக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியினால் நிரப்பப்பட வேண்டியிருக்கும் இடைவெளியை இன்னமும் மூடவில்லை. சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கம் காணப்பட்ட வருவாய் இலக்குடன் ஒப்பிடும்போது அரசாங்க வருவாயில் 100 பில்லியன் பற்றாக்குறை காணப்படுகிறது. வரிப்பணம் பொருத்தமில்லாத வகையில் ஒதுக்கீடு செய்யப்படாமலும் எமது நாட்டில் தொடரும் நடைமுறையாகக் காணப்படும் திரட்டுக்கு உள்ளாகாமலும் ஒழுங்கமைவான முறையில் பயன்படுத்தப்படவேண்டியது அவசியமாகும்.

### ஒப்புரவில்லாத சுமைகள்

மக்கள் மீது மேலும் பொருளாதார இடர்பாடுகள் சுமத்தப்படக்கூடிய அறிகுறிகள் இருக்கின்றன. அரசாங்கம் சுமையை தனவந்தர்கள் மீது அல்ல வறிய மக்கள் மீது விகிதச்சமானமற்ற முறையில் சுமத்துவதே இங்குள்ள பிரச்சினையாகும்.

சர்வதேச நாணய நிதியத்துடனான இலங்கையின் ஊடாட்டம் குறித்து ஆழமான ஆய்வைச் செய்திருக்கும் வெறைற் றிசேர்ச் சிந்தனைக் குழாமின் தலைவரான கலாநிதி நிஷான் டி மெல் உள்நாட்டுக்கடன் மறுசீரமைப்பின் சுமைகளில் சிலவற்றை வங்கி முறைமை தாங்கியிருந்தால் வங்கிகள் நிலைகுலைந்திருக்கும் என்ற அரசாங்கத்தின் நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்ளவில்லை. எந்தவொரு ஆய்வையும் செய்யாமலேயே அரசாங்கம் அந்த முடிவை எடுத்ததாக அவர் சுட்டிக்காட்டுகிறார்.

'கடன் மறுசீரமைப்பைச் செய்த ஏனைய சகல நாடுகளும் அந்த மறுசீரமைப்பின் சுமையின் ஒரு பகுதியை வங்கித்துறை மீது சுமத்தின. கடன் மறுசீரமைப்பின்போது வங்கிகளைப் பாதுகாப்பதற்கு சில வழிமுறைகள் இருக்கின்றன. சகல சுமைகளையும் ஒய்வூதிய நிதியங்கள் மீது சுமத்தியிருக்கும் அரசாங்கம் இந்த நிதியங்கள் மீதான தாக்கம் மட்டுப்படுத்தப்பட்டது என்று கூறுகிறது. உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பினால் பாதிக்கப்பட்டால் வங்கிகள் நிலைகுலைந்துவிடும் என்று அரசாங்கம் கூறுகிறது. எது உண்மை? சுமையின் ஒரு பகுதியை வங்கிகள் ஏன் பகிர்ந்துகொள்ளக்கூடாது?"




பொருளாதார மறுசிரமைப்பின் சுமை விகிதச் சமானமற்ற முறையில் சமூகத்தின் வறிய மக்கள் பிரிவுகள் மீது விழுகிறது என்பது பொதுவான கருத்தாக இருக்கிறது. பொறுப்புக்கூறல் இல்லாத காரணத்தினால் அரசாங்கம் இலாபங்களை தனியார் மயப்படுத்துகின்ற அதேவேளை இழப்புக்களை சமூகமயப்படுத்துகிறது.

"அதிகாரத்தில் உள்ளவர்கள் தங்களுக்கும் தங்களது நண்பர்களுக்கும் பயன்கிடைப்பதற்கான வழிமுறைகளில் கவனம் செலுத்தும்போது அவர்கள் வளர்ச்சியின் பயன்களை சிறிய ஒரு குழுவினர் அனுபவிப்பதை உறுதிசெய்கிறார்கள் அல்லது குறிப்பிட்ட குழுக்களுக்கு பயனைத் தரக்கூடிய கொள்கைகளை நடைமுறைப்படுத்துகிறார்கள். ஆனால் நிலைவரம் பிழையாகப் போகும்போது அதிகாரத்தில் உள்ளவர்கள் இழப்புக்களை பொதுவில் மக்கள் மீது சுமத்துவதை உறுதிசெய்கிறார்கள். இதையே இலங்கையில் நாம் காண்கிறோம்."

இந்த கருத்தை சிவில் சமூக அமைப்புக்களின் கூட்டமைப்பு ஒன்றினால் தயாரிக்கப்பட்ட ஆட்சிமுறை தொடர்பான அறிக்கையிலும் காணக்கூடியதாக இருக்கிறது. அந்த அறிக்கையை பேராசிரியர் அர்ஜூனா பராக்கிரம எழுதியிருந்தார். "தற்போது காணப்படும் பொருளாதார அநீதி பற்றிய உணர்வு உத்தேச சீர்திருத்தங்களின் சுமையின் எந்தவொரு பகுதியையும் பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவர்கள் சுமக்காமல் இருக்கும் நிலைவரத்தினால் மேலும் தீவிரமடைகிறது. நெருக்கடியினால் பாதிக்கப்பட்ட மக்கள் மீதே எந்தவித கலந்தாலோசனையும் இல்லாமல் சுமை உறுதியாக திணிக்கப்படுகிறது" என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

சுமையை ஒப்புரவற்ற முறையில் பகிர்கின்ற இந்த வேலையை அரசியல் நியாயப்பாடு இல்லாத ஒரு அரசாங்கம் செய்வது மேலும் உறுதிப்பாடில்லாத சூழல் உருவாவதற்கு காரணமாக அமையும். தற்போது அரசாங்கத்தில் அமைச்சர்களாக இருப்பவர்கள் ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் மக்கள் போராட்டத்துக்கு மத்தியில் பதவிகளை விட்டு ஓடினார்கள். ஊழல் நடவடிக்கைகளினால் நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டுவந்தமைக்காக அவர்கள் பொறுப்புக் கூறவைக்கப்பட வேண்டும் என்று இலட்சக்கணக்கில் மக்கள் வீதிகளில் இறங்கிநின்று கோரினார்கள்.

எதிரணிக்கு மாறிய சிலரைத் தவிர இப்போது அமைச்சர்களாக இருக்கும் சகலரும் தங்களது அமைச்சுப் பொறுப்புக்களை இராஜினாமா செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். 134 பாராளுமன்ற உறுப்பினர்களின் வாக்குகளினால் சட்டரீதியாக ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்ட பின்னர் விக்கிரமசிங்க மீண்டும் அமைச்சர்களாக சட்டரீதியாக நியமித்தார். ஆனால் நியாயப்பாட்டு பற்றாக்குறை அரசாங்கத்தை தொடர்ந்தும் பயமுறுத்திக் கொண்டேயிருக்கிறது. அரசாங்கம் தற்போது அதன் அதிகார நிலையை வலுப்படுத்திக் கொண்டிருக்கின்ற போதிலும் பாதுகாப்பற்றதாகவே தன்னை உணருகிறது. சகல மக்களையும் பாதிக்கின்ற தீர்மானங்களை எடுக்கும் போது நீதியாகவும் நேர்மையாகவும் நடந்துகொள்வதே அரசாங்கம் நியாயப்பாட்டைப் பெறுவதற்கான வழியாகும்.

### ஜனநாயக விரோத சட்டங்கள்

பரிகார நடவடிக்கைகள் எடுக்கப்படாத பட்சத்தில் சர்வதேச நாணய நிதியத்துனான அரசாங்கத்தின் தற்போதைய ஈடுபாட்டை தொடர்ந்து பேணுவது கஷ்டமாகப் போகலாம். சர்வதேச நாணய நிதியத்தினால் விதிக்கப்பட்ட இலக்குகளை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் தவறுவதனால் மாத்திரம்தான் இந்த நிலைமை என்றில்லை. சர்வதேச நாணய நிதியத்தின் செயற்திட்டம் பற்றி பொதுமக்கள் மத்தியில் நம்பிக்கையும் இல்லை.

எதிர்காலத்தில் பொருளாதார நிலைவரத்தை சர்வதேச நாணய நிதியம் மோசமாக்கும் என்று சுமார் 45 சதவீதமான இலங்கையர்கள் நம்புவதாக வெறைற் றிசேர்ச்சினால் மக்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்ட கருத்துக்கணிப்பு காட்டுகிறது. சர்வதேச நாணய நிதியத்துடனான இலங்கையின் தற்போதைய செயற்திட்டம் எதிர்காலத்தில் பொருளாதாரத்தை மேம்டுத்தும் என்று 28 சதவீதமான இலங்கையர்கள் மாத்திரமே நம்புகிறார்கள்.

பொருளாதார நிலைவரத்தைச் சமாளிப்பதில் மக்கள் முகங்கொடுக்கும் கஷ்டங்கள் அதிகரிப்பதால் போராட்டங்கள் மூளக்கூடும். பொருளாதார இடர்பாடுகளைத் தணிப்பதற்கு பல்வேறு அரசியல் கட்சிகள் சர்வதேச நாணய நிதியத்துடன் இணங்கிக்கொள்ளப்பட்ட பொருளாதார மறுசீரமைப்பு செயற்திட்டத்துக்கு பாதிப்பாக அமையக்கூடியதாக உறுதிமொழிகளை வழங்குவதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

சர்வதேச நாணய நிதியத்துடனான செயற்திட்டத்தை பாதுகாப்பதற்கு தேர்தல்களை ஒத்திவைக்கவேண்டியது அவசியமாகலாம் என்று ஒரு கருத்தைக் கூறி அரசாங்க உறுப்பினர்கள் நாட்டுமக்களின் உணர்வுகளை அறிந்துகொள்ள முயற்சிக்கிறார்கள் போன்று தெரிகிறது. பொருளாதார மீட்சியைக் காரணம் காட்டி இந்த பாதையில் செல்வதற்கான விருப்பத்தை அரசாங்கமும் வெளிக்காட்டியிருக்கிறது.

சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கைக்கு முன்னதாகவே இவ்வருடம் மார்ச் மாதத்தில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த உள்ளூராட்சி தேர்தல்களை அரசாங்கம் (தேர்தல்களை நடத்துவதை விடவும் பொருளாதார மீட்சி மீது கவனத்தைக் குவிக்க வேண்டியது அவசியம் என்று காரணம் கூறி ) ஒத்திவைத்தது.

இன்னும் ஒரு வருடகாலத்தில் நடத்தப்படவேண்டியிருக்கும் ஜனாதிபதி தேர்தலுக்காக 2024 பட்ஜெட்டில் நிதி ஒதுக்கப்பட்டால் மக்களின் பொருளாதாரத் தேவைகளை அரசாங்கத்தினால் நிறைவேற்ற முடியாமற்போகும் என்று ஜனாதிபதி தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளரான பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன அண்மையில் கூறியிருப்பது கவனிக்கத்தக்கது.

கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தையும் போராட்டங்களில் ஈடுபடுவதற்கான மக்களின் உரிமையையும் கட்டுப்படுத்தக்கூடிய சர்ச்சைக்குரிய இரு சட்டமூல வரைவுகளை இத்தகைய பின்னணியிலேயே நோக்கவேண்டியிருக்கிறது.

(16ம் பக்கம் பார்க்க)

# காலிஸ்தான் இயக்கத்தால்..

(14ம் பக்கத் தொடர்ச்சி)

அவுஸ்திரேலியாவில் உள்ள இந்திய மாணவர்களின் எண்ணிக்கை மற்றவர்களை விட அதிகமாக உள்ளது. கடந்த பல ஆண்டுகளாக இந்திய சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது," என்றார்.

காலிஸ்தான் தொடர்பான குறிப்பிடத்தக்க சம்பவங்களில் ஒன்று சமீபத்தில் ஜூலை மாதம் நடந்தது. பயங்கரவாதிகளின் செயல்பாடுகளை எதிர்த்ததற்காக ஆஸ்திரேலியாவில் காலிஸ்தான் ஆதரவாளர்களால் 23 வயது இந்திய மாணவர் இரும்பு கம்பியால் தாக்கப்பட்டதாக ட்ரிப்யூன் செய்தி வெளியிட்டுள்ளது.

சிட்னியின் மேற்கு புறநகர்ப் பகுதியான மெர்ரிலேண்ட்ஸில் அந்த மாணவர் வேலைக்குச் சென்று கொண்டிருந்த போது "காலிஸ்தான் ஜிந்தாபாத்" என்று கோஷமிட்டபடி அவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்த ஆண்டு தொடக்கத்தில் ஆஸ்திரேலியாவில் இந்துக் கோவில்கள் மீது இந்தியாவுக்கு எதிரான சில தாக்குதல்கள் பதிவாகியதை அடுத்து, ஆஸ்திரேலியாவில் உள்ள இந்திய சமூகத்தினரிடையே பதற்றம் ஏற்பட்டது. காலிஸ்தான் ஆதரவு சக்திகளின் இந்தியாவுக்கு எதிரான செயல்பாடுகள் மற்றும் இந்து கோவில்கள் மீதான தாக்குதல்களை கட்டுப்படுத்துமாறு ஆஸ்திரேலியாவை இந்தியா கேட்டுக் கொண்டது. ஆஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்து மாநில காவல்துறை, பிரிஸ்பேன் கோவிலின் வெளிப்புறச் சுவரைச் சிதைத்தது தொடர்பான விசாரணையின் ஆவணங்களை மார்ச் மாதம் வெளியிட்டது.

### பிரிட்டனில் சீக்கியர்கள்

பிரிட்டனில் சுமார் 5.24 லட்சம் சீக்கியர்கள் வசிக்கின்றனர், இது நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 1 சதவீதத்திற்கும் குறைவாக உள்ளது.

இந்தியா மற்றும் பிரிட்டனுக்கு இடையேயான வர்த்தகம் 2022-23ல் 11,406 மில்லியன் டாலர்களாக இருந்தது. இது முந்தைய ஆண்டை விட 9 சதவீதம் அதிகரித்துள்ளது.

2020 ஆம் ஆண்டின் இந்திய தூதரகத்தின் அறிக்கையின்படி, இங்கிலாந்தில் கிட்டத்தட்ட 1.5 மில்லியன் இந்தியர்கள் வசிப்பதாகத் தெரியவந்துள்ளது. 65,000க்கும் மேற்பட்ட இந்திய புலம்பெயர்ந்தோருக்கு சொந்தமான நிறுவனங்கள் இருப்பதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. 'இதில், நாங்கள் ஆய்வு செய்த 654 நிறுவனங்கள் +36.84 பில்லியனுக்கும் அதிகமான வருவாய் ஈட்டியுள்ளன. மேலும், +1 பில்லியனுக்கும் அதிகமான வரி செலுத்துகின்றன."

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த முதல் நாடாளுமன்ற உறுப்பினரான தாதாபாய் நௌரோஜி, 1892-95 வரை லிபரல் டெமாக்ராட் உறுப்பினராக இருந்தார். இந்திய புலம்பெயர்ந்தோர் பல ஆண்டுகளாக அரசியலில் ஈடுபட்டுள்ளனர். 2020 ஆம் ஆண்டில், ஹவுஸ் ஆஃப் காமன்ஸ் சபையில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 15 உறுப்பினர்களும், ஹவுஸ் ஆஃப் லார்ட்ஸ் சபையில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 23 சகாக்களும் இருந்தனர். தற்போதைய பிரதமர் ரிஷி சூனக் கூட இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர்.

### காலிஸ்தான் தொடர்பான செயல்பாடுகள்

கனடாவில் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் மரணம் அடைந்தது போல், பிரிட்டனிலும் சமீபத்தில் காலிஸ்தான் சார்பு தலைவர் ஒருவர் இறந்தார். காலிஸ்தான் விடுதலைப் படையின் தலைவர் என்று கூறப்படும் அவதார் சிங் கந்தா, பர்மிங்காமில் இறந்தார். அவர் இறந்த சூழ்நிலை 'மர்மமான சூழ்நிலைகள்" என்று வர்ணிக்கப்பட்டது, சிலர் விஷம் கொடுத்து அவர் கொல்லப்பட்டிருக்கலாம் என நம்புகின்றனர்.

அண்மை மாதங்களில் லண்டன் பல போராட்டங்களைக் கண்டுள்ளது, இதில் மார்ச் 19 அன்று, காலிஸ்தான் ஆதரவாளர் அம்ரித் பால் சிங்கைக் கைது செய்ய பஞ்சாப் காவல்துறை தேடுதலை தொடங்கிய ஒரு நாளுக்குப் பிறகு, மிகப் பெரிய போராட்டம் நடத்தப்பட்டது. லண்டனில் உள்ள இந்திய தூதரகத்திற்கு வெளியே, அந்த கட்டிடத்தின் முதல் மாடி பால்கனியில் இருந்து இந்தியக் கொடியை ஒருவர் கீழே இழுக்க முற்பட்டது தொடர்பான வீடியோக்கள் வெளியாகின.

### இந்தியா - பிரிட்டன் இருதரப்பு உறவு

ஆனால் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ரிஷி சூனக் தலைமையில், பல நிபுணர்கள் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் எந்தப் பிரச்சினையும் இருப்பதாக நினைக்கவில்லை. 'உண்மையில் ஜி20 மாநாட்டின் போது, இந்தியாவுக்கு விரோதமாக எந்த சட்டவிரோத நடவடிக்கைகளும் பிரிட்டனில் நடக்க அனுமதிக்கப்படாது என்று உறுதியளித்தார்" என்று முன்னாள் தூதர் அனில் திரிகுனாயத் கூறினார்.

# ஒடுக்குமுறை நீடித்து...

(15ம் பக்கத் தொடர்ச்சி)

பயங்கரவாத தடைச்சட்டத்தை பதிலீடு செய்யும் நோக்கில் முன்வைக்கப்பட்டிருக்கும் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் (Anti Terrorism Act) அதன் வீச்செல்லையில் அகல விரிவானதாகவும் மக்கள் போராட்டங்கள் மற்றும் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களை கைதுசெய்வதற்கு அரசாங்கத்துக்கு அதிகாரத்தைக் கொடுப்பதாகவும் அமைந்திருக்கிறது. பொதுமக்களை அல்லது அவர்களில் ஒரு பிரிவினரை அச்சுறுத்தியதாக குற்றச்சாட்டப்படுபவர்களை இந்த சட்டத்தின் கீழ் கைதுசெய்யமுடியும்.

இணையப் பாதுகாப்பு சட்டமூலம் (Online Safety) அரசியல் தொடர்பாடல் நோக்கங்களுக்கு இணையத்தை பயன்படுத்துவதை கட்டுப்படுத்தக்கூடிய ஆற்றலைக் கொண்டதாக இருக்கிறது. ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட ஆணைக்குழு ஒன்றை நியமிப்பதற்கான ஏற்பாடு இந்த சட்டமூலத்தில் இருக்கிறது. சகல உறுப்பினர்களையும் ஜனாதிபதியே நியமிப்பார். இணைய வழி வரும் பொருளடக்கங்களின் உண்மைத்தன்மையை (Veracity of online content) உறுதிசெய்யும் பணி இந்த ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்படும்.

ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் இந்த ஆணைக்குழுவினால் எந்தவொரு சமூக ஊடகக் கணக்கை அல்லது இணையவழி பிரசுரத்தை (Online publication) தடைசெய்யவும் சட்டமூலத்தில் கூறப்பட்டுள்ள குற்றங்களுக்கு சிறைத் தண்டனையை சிபாரிசு செய்யமுடியும்.

மக்களின் சுதந்திரம் மற்றும் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்தை கடுமையாகப் பாதிக்கக்கூடிய இந்த இரு சட்டமூல வரைவுகளும் ஜனநாயகம் மற்றும் சட்டத்தின் ஆட்சி மீது பாரதூரமான தாக்கத்தைக் கொண்டிருக்கும் என்று கூறியிருக்கும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அவற்றை வாபஸ் பெறுமாறு அரசாங்கத்தை கேட்டிருக்கிறது.

இந்த இரு சட்டமூலங்களும் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால் அரசாங்கம் தவறான பாதையில் செல்கின்ற வேளைகளில் கூட அதை எதிர்த்து சவால்விடமுடியாமல் போகும். ஆனால் பொருளாதார நிலைவரம் தொடர்ந்து மோசமாகிக்கொண்டு போகும்போது மக்களின் துன்பங்கள் அதிகரிக்கும் நிலையில் சட்டத்தையும் பாதுகாப்பு படைகளையும் பயன்படுத்தி ஒடுக்குமுறையை முன்னெடுப்பது நீடித்து நிலைக்கக்கூடிய ஒரு தெரிவாக இருக்கப்போவதில்லை.





